
தின
வரலாறு
ஸ்டார்
பிரசுரம்

மே தின வரலாறு

அலெக்ஸாந்தர் டிராச்டென்பர்க்

தமிழில்

ரகுநாதன்

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி :: சென்னை - 5

முதற் பதிப்பு—ஏப்ரல், 1952.

விலை எட்டணா

STAR PUBLICATIONS
Triplicane, Madras-5

PRINTED AT THE SUNDAY TIMES PRESS, MADRAS - 6

மே தின வரலாறு

மே தினம்

மே தினத்தின் மூலாதாரம் வேலை நேரக் குறைப்புக்காக நடத்தப்படும் போராட்டத்தோடு ஒன்று பட்டுப் பின்னிக்கிடக்கிறது. அதாவது தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த கோரிக்கையோடு சம்பந்தப் பட்டிருக்கிறது. அமெரிக்காவின் பாக்டரிச் சட்டம் அமுலுக்கு வந்த நாளிலிருந்தே இந்தப் போராட்டம் தொடங்கி விட்டது என்று சொல்ல வேண்டும்.

இந்த நாட்டில் ஆரம்ப காலத்தில் ஏற்பட்டு வந்த வேலை நிறுத்தங்களுக்குக் கூலி அதிகரிப்புக் கோரிக்கை தான் பொதுவான காரணமாயிருந்தது என்று தோன்றிய போதிலும், வேலை நேரக் குறைப்புப் பிரச்னையும், சங்கம் அமைக்கும் உரிமைப் பிரச்னையும் தொழிலாளர்களின் கோரிக்கைகள் அனைத்திலும் முதலிடம் பெற்று வந்திருக்கின்றன. நாளுக்கு நாள் சுரண்டல் அதிகரித்து வந்த போதும், மனிதத் தன்மைக்கே புறம்பாக மணிக் கணக்கில் வேலை செய்து நொடித்துப் போன தொழிலாளிகளின் துயரம் நாளுக்கு நாள் பெருகி வந்த போதும், வேலை நேரத்தை நியாயமான அளவுக்குக் குறைக்கக் கோரும் கோரிக்கை வலுப்பெற்று வந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, "விடிந்தால் தொடங்கி அடைந்தால் முடியும்" அந்தக்

காலத்து வேலை நேர முறைக்கு எதிராக, அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்கள் குறைகளை உணர்ந்து வந்தார்கள். நாளொன்றுக்குப் பதினாலு மணிநேரம், பதினாறு மணி நேரம், ஏன், பதினெட்டு மணி நேரம்கூட வேலை பார்ப்பது அந்தக் காலத்தில் சர்வ சாதாரணமாயிருந்தது. *1806*—ம் ஆண்டில் வேலை நிறுத்தம் செய்த பிலெடெல்பியா கம்பித் தொழிலாளர்களின் தலைவர்களுக்கு எதிராக நடந்த சதி வழக்கின்போது, தொழிலாளிகளை நாளொன்றுக்குப் பத்தொன்பது மணி நேரம், இருபது மணி நேரம் வேலை வாங்கும் முதலாளித்துவக் கொடுமை வெட்ட வெளிச்சமாயிற்று.

1820—30, 1830—40 ஆண்டுகளில் நடந்த வேலை நிறுத்தங்களின் போது, பல கேந்திரத் தொழில் வட்டாரங்களிலும் வேலை நேரக் குறைப்புக்காகவும், வேலை நேரத்தை *10* மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்பதற்காகவும் தொழிலாளர்கள் திட்ட வட்டமான கோரிக்கைகளைச் சமர்ப்பித்தார்கள். உலகத்தின் முதல் தொழிற் சங்கமாகக் கருதப்படும் பிலெடெல்பியா யந்திரத் தொழிலாளர்கள் சங்கம் (இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட முதல் தொழிற் சங்கத்துக்கு இந்தச் சங்கம் இரண்டு வருஷ காலம் முற்பட்டது.) தான் பத்து மணி நேர வேலைக்காக, *1827*—ம் ஆண்டில் பிலெடெல்பியாவில் நடந்த வேலை நிறுத்தத்துக்கு தொழிலாளிகளை ஒன்றுபடுத்திக் கட்டி வளர்த்தது என்று சொல்ல வேண்டும். *1834*—ம் ஆண்டில், நியூயார்க்கில் நடந்த ரொட்டித் தொழிலாளிகளின் வேலை நிறுத்தத்தின் போது 'ஒர்க்கிங் மென்ஸ் அட்வகேட்' (தொழிலாளர் சகாயன்) என்ற பத்திரிகை பின்வருமாறு எழுதியது: "ரொட்டித்தொழிலில் அமர்த்தப்பட்டுள்ள கூலியாட்கள் எகிப்திய அடிமைத்தனத்தைவிடவும் கேவலமான நிலையில் வருஷக்கணக்காக அவதிப்பட்டு வருகிறார்கள். இருபத்தி

நாலு மணி நேரமுள்ள நாளொன்றுக்கு அவர்கள் பதினெட்டுமணி நேரம், இருபது மணி நேரம்கூட வேலை பார்க்க வேண்டியிருக்கிறது.''

பத்து மணி நேர வேலைக்காக, அந்த வட்டாரங்களில் தொடங்கிய கோரிக்கைப் பிரச்னை விரைவில் ஒரு இயக்கமாக வளர்ந்து உருவாகிவிட்டது. 1837-ம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி காரணமாக, ஜனாதிபதி வான் புரனின் ஆதிக்கத்திலிருந்த மிதவாதச் சர்க்கார், சர்க்கார் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, நாளொன்றுக்கு பத்து மணி நேர வேலைதான் என்பதைப் பிரகடனம் செய்ய நேர்ந்த போதிலும்கூட, தொழிலாளர்களின் இயக்கம் அதனால் பாதிக்கப்படாமல் வளர்ச்சியுற்றது. இருந்தாலும் 1830-ம் ஆண்டுக்குப் பிற்பட்ட வருஷங்களில் 'எல்லோருக்கும் பத்து மணி நேர வேலை' என்ற கோரிக்கைக்கான போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வந்தது. மேலும், இந்தப் பத்து மணி நேரக் கோரிக்கை பல தொழில் வட்டாரங்களில் பரவிக் கொண்டிருக்கும் போதே, தொழிலாளர்கள் எட்டு மணி நேர வேலைக் கோரிக்கையைக் கோரத் தொடங்கிவிட்டார்கள். 1850—60 ஆண்டுகளில் தொழிற் சங்கங்களைக் கட்டி வளர்ப்பதில் இருந்த உத்வேகத்தால் இந்தப் புதிய கோரிக்கைக்கு எதிர்ப்பு ஏற்பட்டபோதிலும், 1857-ம் வருஷத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால், அது தடைப்பட்டுப் போயிற்று. இருந்தாலும், இந்தக் கோரிக்கை நன்றாகக் கட்டி வளர்க்கப்பட்ட சில தொழில் கேந்திரங்களில் நெருக்கடிக்காலம் தீருவதற்கு முன்னமேயே வெற்றிபெற்றுவிட்டது. வேலை நேரக் குறைப்புக்காக நடந்த இயக்கம் அமெரிக்காவின் ஏகபோக இயக்கம் அல்ல. வளர்ந்துவரும் முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு எங்கெங்கெல்லாம் தொழிலாளர்கள் பலியானார்களோ அங்கங்கெல்லாம் இந்த இயக்கம்

வலுப்பெற்றது. இந்த உண்மையை, 'எட்டு மணி நேர வேலை, எட்டு மணி நேரப் பொழுதுபோக்கு, எட்டு மணி நேர ஓய்வு என்ற கோரிக்கையை எழுப்பிய தூரம் தொலையிலுள்ள ஆஸ்திரேலியத் தொழிலாளரின் இயக்கத்திலிருந்து உணர்ந்து கொள்ளலாம். அவர்கள் தங்களது கோரிக்கையின் வெற்றியை 1856-ம் ஆண்டில் அடைந்தும் விட்டார்கள்.

அமெரிக்காவில் தொடங்கிய எட்டு மணி நேர வேலை இயக்கம்

மே தினப் பிறப்புக்கு நேரடியாக வழி கோலிக் கொடுத்த போராட்டங்களை அமெரிக்காவில் 1884-ம் ஆண்டில் நடந்த எட்டுமணி நேர வேலை இயக்கம்தான் தொடங்கி வைத்தது. இருந்தாலும், இதற்கு ஒரு தலைமுறைக்கு முன்னமேயே, 'தேசியத் தொழிற் சங்கம்' என்ற ஒரு தொழிலாளர் சங்கம் அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலே ஒரு போராட்ட சக்தியாக வளர்ந்து வலுப் பெற்றுவிட்டது; இந்தச் சங்கம் வேலை நேரப் பிரச்னையை ஆராய்ந்து, அந்தக் கோரிக்கைக்காக, ஒரு பரந்து விரிந்த இயக்கத்தைத் தொடங்கத் தீர்மானித்தது. உள்நாட்டு யுத்தத்தின் தொடக்கக் காலத்தில், அதாவது 1861-62-ம் வருஷங்களில், யுத்தம் ஆரம்பிப்பதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு தொடங்கிய சில தேசியத் தொழிற் சங்கங்கள் மங்கி மறைந்து விட்டன. அப்படி மறைந்த சங்கங்களில் வார்ப்புத் தொழிலாளர் சங்கமும், யந்திரத் தொழிலாளர் சங்கமும், கொல்லுலைத் தொழிலாளர் சங்கமும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவை. இருந்தாலும், அதை அடுத்த ஆண்டுகளில், பல தொழிற் சங்கங்கள் தேசிய ரீதியில் ஒன்றுபட்டு வலுப் பெற்றன. இந்தச்

சங்கங்களின் ஒன்றுபட்ட தேசிய சம்மேளனத்தின் அத்தியாவசியம் முக்கியத்துவம் பெற்றது. 1886-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இருபதாம் தேதியன்று, அறுபது தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் பால்டிமோர் என்ற இடத்தில் கூடினார்கள்; 'தேசியத் தொழிற் சங்க'த்தை ஸ்தாபித்தார்கள். திருத்தியமைக்கப்பட்ட வார்ப்புத் தொழிலாளர் சங்கத்தின் தலைவரான வில்லியம் எச். ஸில்விஸ் என்பவர்தான் தேசியத் தொழிற் சங்கத்துக்கான இயக்கத்தை முன்னின்று நடத்தினர். அவர் வயதில் இளையவரான போதிலும், அந்தக் காலத்துத் தொழிலாளர் இயக்கத்தில் ஒரு பெருந் தலைவராகவே விளங்கி வந்தார். லண்டனிலிருந்த முதலாம் கம்யூனிஸ்டு அகில ஸ்தாபனத் தலைவர்களோடு ஸில்விஸ் தொடர்பு வைத்திருந்தார். மேலும் கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனத்தின் பொதுச் சபையோடு தேசியத் தொழிற்சங்கம் தொடர்பு கொள்வதற்கும் அவர் உதவினர்.

தேசியத் தொழிற் சங்கத்தின் 1886-ம் ஆண்டுக் கூட்டத்தின்போது கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

"முதலாளித்துவ அடிமைத்தனத்திலிருந்து இந்த நாட்டின் தொழிலாளி வர்க்கத்தை விடுவிப்பதற்காக, அமெரிக்க நாட்டின் சகல பகுதிகளிலும் 8 மணி நேர வேலையைச் சட்ட பூர்வமாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். இதுவே இன்றைக்கு முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்த அத்தியாவசியமான காரியமாகும். எனவே இந்தக் கோரிக்கை மகத்தான வெற்றிபெறும் வரையிலும் நாம் நமது சகல சக்தியையும் பிரயோகிப்பதென்று தீர்மானம் செய்கிறோம்."

எட்டுமணி நேர வேலையைச் சட்ட பூர்வமாகக் கொண்டு வரும் போராட்டத்தோடு சம்பந்தப்பட்ட தனிப்பட்ட

அரசியல் இயக்கத்தைத் தொடங்குவதென்றும், 'தொழிலாளி வர்க்கத்தின் நல உரிமைகளை எடுத்துச் சொல்லவும் காப்பாற்றவும் தகுதிவாய்ந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்காகக் கிளர்ச்சி செய்வதென்றும் இதே மகாநாடு ஒட்டெடுத்துத் தீர்மானித்தது.

தேசியத் தொழிற் சங்கத்தின் கிளர்ச்சியின் காரணமாக, 'எட்டு மணி நேர வேலை'ச் சங்கங்கள் உருவெடுத்தன. இந்தச் சங்கத்தின் அரசியல் இயக்கத்தின் மூலம், பல மாகாண சர்க்கார்கள் சர்க்கார் காரியாலயங்களில் எட்டு மணி நேர வேலையை அமுலுக்குக் கொண்டு வந்தது. அமெரிக்கச் சட்டசபை 1868-ம் வருஷத்தில் இதுபோன்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. எட்டுமணி நேர இயக்கத்தின் ஆர்வமிக்க தலைவர், பாஸ்டன் நகரிலுள்ள யந்திரத் தொழிலாளியான இரா ஸ்டீவர்ட் என்பவர்.

ஆரம்ப காலத் தொழிலாளர் இயக்கத்தின் கொள்கைகளும், திட்டங்களும் பிற்போக்கானதாகவும், ஸ்திரமற்றதாகவும் இருந்தபோதிலும்கூட, சரியான தொழிலாளி வர்க்க உணர்ச்சியையே அஸ்திவாரமாகக் கொண்டிருந்தன. பிற்காலத்தில் சீர்திருத்த வாதிகளும், முதலாளித்துவ அரசியல்வாதிகளும் தொழிற் சங்கங்களுக்குள் புகுந்து, அவற்றைத் தவறான பாதைகளில் செலுத்திக் கொண்டு மட்டும் போகாமல் இருந்திருந்தால், அந்த ஆரம்ப காலத் தொழிலாளர் இயக்கத்தின் கொள்கைகளே ஒரு போராட்ட சக்தி வாய்ந்த தொழிலாளர் இயக்கவளர்ச்சிக்கு பூர்வாங்கக் கொள்கைகளாக விளங்கியிருந்திருக்கக்கூடும். எனவே, நாலு தலை முறைக்குப் பின்னர்தான் அமெரிக்கத் தொழிலாளிகளின் தேசிய ஸ்தாபனமான தேசிய தொழிற் சங்கம் 'முதலாளித்வ அடிமைத்தனத்துக்கு' எதிராகவும், சுதந்திரமான அரசியல் இயக்கத்துக்காகவும் போராட முன் வந்தது.

ஸில்விஸ் லண்டனிலிருந்த கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனத்தோடு இடையருது தொடர்பு வைத்திருந்தார். தேசிய தொழிற் சங்கத்தின் தலைவராக அவர் இருந்ததின் பலனுக, 1867-ம் வருஷத்தில் கூடிய தேசிய தொழிற்சங்க மகாநாடு சர்வதேசத் தொழிலாளிவர்க்க இயக்கத்தோடு தாமும் ஒத்துழைப்பதென்று தீர்மானித்தது. மேலும், 1869-ம் வருஷத்தில் கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனத்தின் பொதுச் சபையின் அழைப்பை ஏற்று, கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனம் பார்ஸலேயில் கூடிய மகாநாட்டுக்கு ஒரு பிரதிநிதியை அனுப்புவதென்றும் தீர்மானம் செய்தது. துரதிருஷ்டவசமாக, தேசியத் தொழிற்சங்க மகாநாடு கூடுவதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு ஸில்விஸ் காலமாகிவிட்டார். எனவே, சிகாகோ நகரிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'ஒர்க்கிங்மென்ஸ் அட்வகேட்' (தொழிலாளர் சகாயன்) என்னும் பத்திரிகையின் ஆசிரியரான ஏ. ஸி. காமிரான் என்பவரைத்தான் ஸில்விஸுக்குப் பதிலாக, பிரதிநிதியாக அனுப்பிவைத்தார்கள். கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனத்தின் பொதுச்சபை அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்தின் வாலிபத் தலைவரான ஸில்விஸின் மரணத்தைக் குறித்து ஒரு பிரத்தியேகமான தீர்மானத்தை நிறைவேற்றி வருத்தம் தெரிவித்தது. "தொழிலாளர் சேனையின் தளபதியாகப் பத்து வருஷகாலம் அனுபவம் பெற்றுத் தம் சக்திக்கு மீறிய பெருஞ் சேவை செய்த ஸில்விஸின்மீதே எல்லோருடைய கவனமும் திரும்பியிருந்தது. ஆனல், ஸில்விஸோ—இறந்து விட்டார்" என்று அந்தத்தீர்மானம் குறிப்பிட்டது. தேசியத் தொழிற் சங்கம் பின்னர் சீரழிவுறத் தொடங்கியதற்கும் மறைந்தழிவதற்கு உரிய பல காரணங்களில் ஸில்விஸின் மரணமும் ஒன்ருகும்.

எட்டுமணி நேர இயக்கத்தைப்பற்றி கார்ல் மார்க்ஸ்

எட்டு மணி நேர வேலைக் கோரிக்கையை தேசியத் தொழிற் சங்கம் 1866—ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தீர்மானம் செய்தது. அதே ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜெனிவாவில் கூடிய முதலாம் கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனக் கூட்டத்தில், இந்தத் தீர்மானம் பின் வருமாறு பதிவாயிற்று :

"வேலை நேரத்தைச் சட்ட பூர்வமாகக் கட்டுப்படுத்த வேண்டியது ஒரு பிரதான அம்சம் ஆகும். ஏனெனில், அதுவில்லாமல், தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் செய்யும் பிற முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போய் விடும்...இந்த மகாநாடு வேலை நேரம் எட்டு மணியாக இருப்பதுதான் நியாயம் என்று தீர்மானிக்கிறது."

1867—ம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'காபிடலின்' (மூலதனம்) முதற் பகுதியில், 'வேலை நேரம்' என்ற அத்தியாயத்தில், தேசியத் தொழிற் சங்கம் தொடங்கி வைத்த எட்டு மணி நேர இயக்கத்தைப் பற்றி கார்ல் மார்க்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். இந்தப் பகுதி பிரத்தியேக முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், நீக்ரோ தொழிலாளருக்கும், வெள்ளைத் தொழிலாளருக்கும் உள்ள வர்க்க நலன்களின் ஒற்றுமையைப் பற்றியும் மார்க்ஸ் அதில் குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் பகுதியில் அவர் எழுதியிருப்பதாவது :

"அமெரிக்க நாட்டில், குடியரசின் ஒரு பகுதி அடிமைத் தனத்தால் கட்டுப்படுத்தப் பட்டிருந்த வரையிலும், அங்கு தொழிலாளர்களின் எந்த விதமான சுதந்திர இயக்கங்களும் முடக்கப் பட்டுத்தான் நின்றன. கறுப்புத் தோல் தொழிலாளிகள் அடிமைப் பட்டுக் கிடக்

கும்போது வெள்ளைத் தோல் தொழிலாளிகளும் தங்களை மட்டும் விடுவித்துக் கொள்ள முடியாது. ஆனால் அடிமைத் தனம் செத்தொழிந்ததால், ஒரு புதிய உத்வேக மயமான வாழ்க்கை உருவெடுத்தது. உள்நாட்டு யுத்தத்தால் ஏற் பட்ட முதல் பலன் எட்டு மணி நேர வேலைக்காக எழுந்த கிளர்ச்சிதான். அந்த இயக்கம் அட்லாண்டிக்கிலிருந்து பஸிபிக் வரை, நியூ இங்கிலாந்திலிருந்து கலிபோர்னியா வரை வெகு வேகத்தில் பரவியது.''

எட்டு மணி நேர வேலைக் கோரிக்கையை பால்டிமோரில் கூடிய தொழிலாளர் மகாநாடு தீர்மானித்த, அதே சமயத் தில், திட்ட வட்டமாகச் சொன்னால், இரண்டே இரண்டு வார இடைக் காலத்துக்குள், ஸ்விட்ஸர்லாந்திலுள்ள ஜெனிவா நகரத்தில் கூடிய மகாநாடும் அதே தீர்மானத்தை நிறைவேற்றியதையும் கார்ல்மார்க்ஸ் தமது நூலில் சுட்டிக் காட்டியிருக்கிறார். "இவ்வாறாக அட்லாண்டிக் மகா சமுத் திரத்தின் இரு கரையிலும் வளர்ந்த தொழிலாளி வர்க்க இயக்கம், உற்பத்தி நிலைமைகளால் தன்னிச்சையாகத் தவிர்க்க முடியாதவாறு ஏற்பட்ட விளைவான இந்த இயக்கம்'' வேலை நேர நிர்ணயத்துக்கான இயக்கத்தை வரவேற்றதோடு மட்டுமல்லாமல், அதை எட்டு மணி நேர வேலைக் கோரிக்கையாகத் தீர்மான பூர்வமாக ஆதரித்து ஸ்திரப்படுத்தவும் செய்தது.

ஜெனிவாவில் கூடிய கம்யூனிஸ்ட் மகா நாட்டின் தீர் மானமும், அமெரிக்கத் தீர்மானமும் ஒன்று பட்டிருப்பதை கீழ்க் காணும் அந்தத் தீர்மானத்தின் பகுதியிலிருந்து கண்டு கொள்ளலாம்: "இந்த நிர்ணயம் வட அமெரிக்கத் தொழிலாளிகளின் பொதுவான கோரிக்கையைப் பிரதி பலிப்பதால், இந்த மகாநாடு (கம்யூனிஸ்ட் மகாநாடு) இந்தக் கோரிக்கையை அகில உலகத்தின் தொழிலாளி வர்க்கத் தின் கோரிக்கையாக மாற்றத் தீர்மானிக்கிறது.''

அமெரிக்கத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் மூலம் ஏற்பட்ட இதுபோன்ற ஒரு சம்பவம், 23 வருஷங்களுக்குப் பிறகு இதே கொள்கைக்காக மீண்டும் ஏற்பட்டதும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

மே தினம் பிறந்தது அமெரிக்காவிலே!

முதலாம் கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனம் 1876-ம் வருஷம்வரையிலும் ஸ்தாபன பூர்வமாகக் கலைக்கப்படவில்லை யென்றாலும் கூட, கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனத்தின் தலைமை ஸ்தாபனம் 1872-ம் வருஷத்தில் லண்டனிலிருந்து நியூயார்க்குக்கு மாற்றப்பட்ட காலத்திலேயே முதலாம் கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனம் மறைந்துவிட்டது. கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனத்தைத் திரும்பவும் திருத்திக் கூட்டி, 1889-ம் வருஷத்தில் பாரீஸில் கூடிய கூட்டத்தில், அதாவது, பின்னர் இரண்டாம் கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனம் என்று அழைக்கப்பெற்ற மகாநாட்டில், மே தினத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசியல் ஸ்தாபனங்களிலும் தொழிலாளிவர்க்க ஸ்தாபனங்களிலும் உள்ள உலகத்தின் சகல தொழிலாளிகளும் தங்களது முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் கோரிக்கைக்காக, அதாவது எட்டு மணி நேர வேலைக் கோரிக்கைக்காகப் போராடுவதற்குரிய போராட்ட தினமாக மே மாதம் முதல் தேதியைத் தீர்மானித்தது. பாரீஸில் கூடிய மகாநாட்டுக்கு ஐந்து வருஷ காலத்துக்கு முன்பு, சிகாகோ நகரில் கூடிய அமெரிக்கத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் பிரதி நிதிகள் செய்த தீர்மானம் பாரீஸ் தீர்மானத்துக்குப் பாதை வகுத்துக் கொடுத்தது. இந்த அமெரிக்க ஸ்தாபனம் "தொழிற்சங்கச் சம்மேளன"மும், "அமெரிக்க, கனடா தேசத்துத் தொழிலாளர் சங்க"ங்களும் கூடிய ஒரு கூட்டு

ஸ்தாபனமாகும். இந்த ஸ்தாபனம் பின்னர் அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் (A. F. Of. L.) என்று சுருக்கமாகப் பெயர் பெற்றது. இந்தச் சம்மேளனத்தின் நாலாவது மகாநாட்டில், அதாவது 1884-ம் வருஷம் அக்டோபர் மாதம் 7-ம் தேதியன்று, கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது :

"1886:ம் வருஷம் மே மாதம் முதல் தேதி முதற் கொண்டு எட்டுமணி நேரம்தான் தொழிலாளரின் சட்டபூர்வமான வேலை நேரமாக இருக்கவேண்டும் என்று, தொழிற்சங்கச் சம்மேளனமும், அமெரிக்க கனடா தொழிற் சங்கங்களும் சேர்ந்த இந்த மகாநாட்டின் பிரதி நிதிகளான நாங்கள் தீர்மானிக்கிறோம். எனவே சகல தொழிற் சங்கங்களும் தங்கள் தங்கள் வட்டாரங்களில் இந்தத் தீர்மானத்துக்கு உகந்தாற்போல் குறிப்பிட்ட தினத்திலிருந்து தமது சட்டதிட்டங்களையும் வகுத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்."

எட்டு மணி நேர வேலையை இந்தச் சம்மேளனம் எப்படி அமுலுக்குக் கொண்டுவரப்போகிறது என்பதற்கான வழிமுறைகளைப்பற்றி இந்தத் தீர்மானத்தில் எதுவும் சொல்லப்படவில்லை யென்றாலும்கூட, ஒன்று மட்டும் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. இந்தச் சம்மேளனம் சுமார் 50,000 தொழிலாளர்களின் அசைக்க முடியாத ஐக்கிய பலத்தைக் கொண்டது. எனவே இப்படிப்பட்ட ஒரு ஸ்தாபனம் தங்களது கோரிக்கைக்காக, கடைகளிலும், மில்களிலும், சுரங்கங்களிலும் வேலை பார்க்கும் தனது ஸ்தாபன அங்கத்தினர்களான தொழிலாளர்களின் மூலம் ஒரு போராட்டத்தைத் தொடங்காமல், எட்டு மணி நேர வேலைக்காக நடக்கும் போராட்டத்தில் மேலும் மேலும் பல தொழிலாளர்களைக் கவர்ந்தி

மூத்துப் போராட்டத்தை வலுப்பெறச் செய்யமுயலாமல், 'ஒரு நாளுக்கு எட்டு மணி நேரம்தான் நியாயமான வேலை நேரம்' என்ற கோரிக்கையைப் பிரகடனம் செய்து வெற்றி காண முடியாது என்பது வெளிப்படை. "இந்தத் தீர்மானத்துக்கு உகந்தாற்போல் தமது சட்டதிட்டங்களை வகுத்துக் கொள்ள" வேண்டிய இந்தச் சம்மேளனத்தின் அங்கங்களான தொழிற் சங்கங்களைப் பற்றிய ஷரத்தும் இந்தத் தீர்மானத்தில் காணப்பட்டது; அதாவது, 1886-ம் வருஷம் மே மாதம் முதல் தேதியன்று வேலை நிறுத்தம் செய்யவிருக்கும் தொழிலாளிகளுக்கு வேலை நிறுத்த கால சகாய நிதி திரட்டி அளிக்கவும், வேலை நிறுத்தத்தின் காரணமாக, வெளியே வெகு காலம் இருக்க நேருங்காலத்தில், தொழிற்சங்கம் அவர்களுக்கு வேண்டிய உதவி செய்யவும் வேண்டுமென ஒரு ஷரத்துக் காணப்பட்டது. இந்த வேலை நிறுத்த நடவடிக்கை தேசிய முக்கியத்துவம் கொண்டதாகவும், சம்மேளனத்தின் சட்டதிட்டப்படி சம்மேளனத்தோடு இணைக்கப்பட்ட சகல தொழிற் சங்கங்களையும் தன்னுட்படுத்துவதாகவும் இருக்குமெனத் தீர்மானம் செய்தார்கள். எனவே, சகாய நிதி உதவி முதலிய செலவினங்கள் ஏற்படும் என்றும், அந்தச் செலவினங்களின் காரணமாக, வேலை நிறுத்தத்துக்குச் சம்மேளனத்தின் சகல தொழிலாளர்களது சம்மதமும் பெறவேண்டும் என்றும் கூறப்பட்டது. இன்றைய அமெரிக்கத் தொழிற் சங்கச் சம்மேளனத்தைப் (A. F. L) போலவே, அந்தச் சம்மேளனமும் தன்னிச்சையான சம்மேளன அடிப்படையிலும், சம்மேளனத்தோடு சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்கள் தேசிய மகாநாட்டின் தீர்மானங்களை ஆமோதித்ததால்தான் அந்தத் தீர்மானங்கள் அந்தந்தச் சங்கங்களையும் கட்டுப்படுத்தும் என்ற முறையிலும்தான் கட்டியமைக்கப் பெற்றிருந்தது.

மே தின வேலை நிறுத்தத்துக்கான ஏற்பாடுகள்

1877-ம் ஆண்டில் நடந்த மாபெரும் போராட்டங்கள், பல்லாயிரக் கணக்கான ரயில்வேத் தொழிலாளர்களும் உருக்குத் தொழிலாளர்களும் சர்க்காரையும் சர்க்கார் ஸ்தாபனங்களையும் எதிர்த்து நடத்திய போராட்டங்கள், ராணுவத்தை அனுப்பி சர்க்கார் முறியடிக்க முனைந்த அந்த வேலை நிறுத்தப் போராட்டங்கள் அனைத்தும் தொழிலாளர் இயக்கம் முழுவதிலும் ஒரு ஆழ்ந்த உணர்ச்சியை ஏற்படுத்திவிட்டன. தேச மய பூர்வமாக நடந்த அமெரிக்கத் தொழிலாளர்களின் இந்த மாபெரும் பொதுஜன இயக்கத்தைப் பண மூட்டைகளும் சர்க்காரும் கூட்டுச் சேர்ந்து கொண்டு அடக்கு முறையால் தோற்கடித்த போதிலும் கூட, இந்தப் போராட்டங்களின் மூலம் அமெரிக்கத் தொழிலாளர்கள் சமுதாய அமைப்பில் தமது வர்க்கத்துக்குக் குரிய ஸ்தானத்தைப் பற்றியும், தமது மாபெரும் போராட்ட சக்தியைப் பற்றியும், தமது தலைசிறந்த கடமையைப் பற்றியும் தெள்ளத் தெளிவான ஞானபோதம் பெற்று மேலோங்கினார்கள். நிலக்கரி வட்டாரங்களிலுள்ள சுரங்கத் தொழிலாளர்களின் சங்கத்தை ஒழிக்க முற்பட்டதோடு, *1875*-ம் வருஷத்தில் போராட்ட வீரர்களான பத்துச் சுரங்கத் தொழிலாளர்களை (மோலிமாகெய்ரெஸ்) தூக்கு மேடைக்கு அனுப்பி வைத்த பென்ஸில்வேனிய நிலக்கரி முதலாளிகளுக்குத் தொழிற்சங்கம் அளித்த பதிலில் தொழிலாளிகளின் இந்தப் புதியவர்க்க போத உணர்ச்சி நன்கு பிரதிபலித்தது.

1880-90-ம் வருஷங்கள் அமெரிக்கத் தொழில் வளர்ச்சியிலும், உள்நாட்டு வியாபார விஸ்தரிப்பிலும் பெரிதும் ஈடுபட்டுவந்த காலமாக இருந்தபோதிலும்கூட, *1884-85*-ம் வருஷங்களில், *1873*-ம் வருஷத்து நெருக்கடியைத்

தொடர்ந்து ஏற்பட்ட அடுத்த பொருளாதார நெருக்கடியால் அமெரிக்கத் தொழிலரங்கம் பாதிக்கப்பட்டது. இந்த நெருக்கடிக் காலத்தில் ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டத்தாலும், இந்தக் காலத்தில் தொழிலாளர்கள் அனுபவித்த பெருந்துன்பங்களாலும், வேலை நேரக் குறைப்பு இயக்கம் மேலும் வலுப்பெற்று ஓங்கியது.

அப்போதுதான் தொடங்கப்பெற்ற அமெரிக்கத் தொழிற்சங்கச் சம்மேளனம் எட்டுமணி நேர வேலைக் கோரிக்கையின் மூலம், எப்படிச் சம்மேளனத்தில் சேராத எண்ணற்ற தொழிலாளர்களையும் பழமையான எனினும் அப்போதும் வளர்ச்சி நிலையிலேயே யிருந்த 'நைட்ஸ் ஆப் லேபர்' (Knights of Labour) என்ற ஸ்தாபனத்தையும் ஒன்று படுத்தி வேலை நிறுத்தத்துக்கான மாபெரும் போராட்டத்துக்குத் தயார் செய்ய முடியும் என்ற சாதக சந்தர்ப்பத்தையும் நன்கு உணர்ந்து கொண்டது. சகல தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டு இயங்கினால்தான் சாதகமான நற்பலன்கள் கிட்டும் என்பதை நன்குணர்ந்து கொண்ட தொழிற்சங்கச் சம்மேளனம் 'நைட்ஸ் ஆப் லேபர்' ஸ்தாபனத்தையும் போராட்டத்தில் சேரும்படி அறைகூவி அழைத்தது. மே மாதம் முதல் தேதியன்று வேலைக்குச் செல்லக்கூடாது என்ற தீர்மானம் 1885-ம் வருஷம் கூடிய சம்மேளன மகாநாட்டில் மீண்டும் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தின்மூலம் பல்வேறு தேசியத் தொழிற் சங்கங்கள் போராட்டத்துக்கான நடவடிக்கைகளைத் தொடங்க ஆரம்பித்தன. இவற்றில் தச்சுத் தொழிலாளர்கள் சங்கமும் சிகரெட்டுத் தொழிலாளர் சங்கமும் குறிப்பிடத் தகுந்தவை. எட்டுமணி நேர வேலைக் கோரிக்கைக்காக மே மாதம் முதல் தேதியன்று ஆரம்பிக்க விருக்கும் போராட்டத்துக்கான அறை கூவலின் மூலம் தொழிற் சங்கங்களின் அங்கத்தினர் தொகை நாளுக்குநாள் அதிக

ரித்து வருவதையும் காணமுடிந்தது. 'நைட்ஸ் ஆப் லேபர்' ஸ்தாபனம் 1886-ம் வருஷத்தில் அமோகமான அங்கத்தி னர் பலத்தைப்பெற்றுத் தனது வளர்ச்சியின் உச்சஸ் தானத்தை எட்டிப் பிடித்தது. தொழிற் சங்கச் சம்மேள னத்தைவிட நன்கு பிரபலமான நைட்ஸ் ஆப் லேபர் ஸ்தாபனம் ஒரு போராட்ட சக்தியாகக் கருதப்பட்டது. மேலும் அந்தக் குறிப்பிட்ட காலவரையறையில், அந்தச் சங்கம் தனது அங்கத்தினர் எண்ணிக்கையை 200,000 லிருந்து சுமார் 700,000 வரை உயர்த்தி வளர்த்து பலப் படுத்திவிட்டது. இயக்கத்தைத் தொடங்கிவைப்பதற்கும் எட்டுமணி நேர வேலைக்கான வேலை நிறுத்தப் போரைத் தொடங்கும் நாளைக் குறிப்பிடுவதற்கும் முன்நின்று வேலை செய்த தொழிற்சங்கச் சம்மேளனத்திலும் அங்கத்தினர் தொகை அமோகமாகப் பெருகியது; மேலும், ஜன சமூத் திரமாக இயங்கும் தொழிலாளர் கூட்டத்தின் மத்தியிலே மாபெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. வேலை நிறுத்தத்துக்கான நாள் நெருங்கிவரும் காலத்தில் நைட்ஸ் ஆப் லேபர் ஸ்தாபனத்தின் தலைமை முக்கியமாக அந்த ஸ்தாபனத்தின் தலைவரான டெரென்ஸ் பௌடர்லி என்பவர் வேலை நிறுத்த இயக்கத்தை உடைக்க முயற்சி செய்தார். தனது ஸ்தாபனத்துக்கு உட்பட்ட தொழி லாளர் சங்கங்களை வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாதென்று ரகசியமாகப் போதித்தார். இந்த நாச வேலைக்காரியம் வெட்ட வெளிச்சமானபோது, சம்மேள னத்தின் செல்வாக்கும் பிரபலமும் மேலும் பன்மடங்கு உயர்ந்து விளங்கியது. இரண்டு ஸ்தாபனங்களிலுமுள்ள பொது அங்கத்தினர்கள் போராட்டத்துக்குத் தீவிரமாகத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தார்கள். எட்டு மணிநேர வேலைச் சங்கங்களும், ஸ்தாபனங்களும் பல்வேறு நகரங்களிலும் தோன்றத் தொடங்கின. தொழிலாளர்

இயக்கத்திடையே உத்வேக உணர்ச்சிபெற்று விளங்கும் போராட்ட சக்தி தொழிற்சங்கத்தில் சேராத தொழிலாளர் சமூகத்தையும் கவர்ந்திழுத்தது. அமெரிக்கத் தொழிலாளர் வர்க்கத்துக்கு ஒரு புதிய சகாப்தத்தின் உதய காலம் நெருங்கி வந்துகொண்டிருந்தது.

தொழிலாளர்களின் உணர்ச்சியை அளவிட்டு உணர்ந்து கொள்வதற்குரிய சரியான மார்க்கம், தொழிலாளர்களின் போராட்டங்களையும், அவற்றின் உத்வேகத்தையும், விரிவையும் ஆராய்ந்து உணர்ந்து கொள்வதுதான். ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் நடக்கும் வேலை நிறுத்தங்களின் மொத்த எண்ணிக்கைதான் தொழிலாளர்களின் போராட்ட உணர்ச்சியைச் சரியானபடி எடுத்துக் காட்டும் சூசகமாகும். 1885—86-ம் வருஷங்களில் நடந்த வேலை நிறுத்தப் போராட்டங்களை அதற்கு முன்னைய வருஷங்களில் நடந்த போராட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தபோதுதான், தொழிலாளர் இயக்கத்தில் எப்படிப் பட்ட போராட்ட சக்தி வளர்ந்து பெருகி யிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. 1886-ம் வருஷம் மே மாதம் முதல் தேதியில் நடக்க வேண்டிய போராட்டத்துக்காக, தொழிலாளர்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டதோடு மட்டுமல்ல; 1885-ம் வருஷத்தில் நடந்த வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவுக்கு உயர்ந்திருந்தது. 1881—84-ம் வருஷங்களில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்பு முதலியவற்றின் சராசரி எண்ணிக்கை 500-க்கும் குறைவாகவே இருந்தது. அந்தப் போராட்டங்களில் கலந்துகொண்ட தொழிலாளர் எண்ணிக்கையும் சராசரி ஒரு வருஷத்துக்கு 150,000 மாகவே இருந்தது. ஆனால் 1885—ம் வருஷத்தில் நடந்த வேலை நிறுத்தங்களாலும் கதவடைப்புக்களாலும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எண்ணிக்கையோ 250,000-க்கு எம்பி

விட்டது. 1886—ம் வருஷத்திலோ, 1885—ம் வருஷத்தில் நடந்த வேலை நிறுத்தங்களைப் போல் இரண்டு மடங்கு வேலை நிறுத்தங்கள் நடந்தன. அதாவது 1572 வேலை நிறுத்தங்கள் நடந்தன. இந்தப் போராட்டங்களால் பாதிக் கப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கையும் 1886—ம் வருஷத் தில் 600,000 மாக உயர்ந்து விட்டது. 1886—ம் வருஷத் தில் வேலை நிறுத்த இயக்கம் எப்படி வளர்ச்சியுற்று மேலோங்கியது என்பதை இந்த உண்மையிலிருந்து கண்டு கொள்ளலாம். 1885—ம் வருஷத்தில் நடந்த வேலை நிறுத்தப் போராட்டங்களால் பாதிக்கப்பட்ட ஸ்தாபனங் களோ 2467 மட்டும்தான். ஆனால் அடுத்த வருஷத்தில் அதாவது 1886—ம் வருஷத்தில் பாதிக்கப்பட்ட ஸ்தாப னங்களின் தொகையோ 11,562 ஆக உயர்ந்து விட்டது. நைட்ஸ் ஆப் லேபர் ஸ்தாபனத்தின் தலைமைப் பீடம் வேலை நிறுத்தப் போரைப் பகிரங்கமாகவே உடைக்க முயன்ற போதிலும்கூட, எட்டு மணி நேரப் போராட்ட வேலை நிறுத்தங்களில் 500,000-மேற்பட்ட தொழிலாளர் கள் கலந்து கொண்டார்கள்.

சிகாகோ நகரம்தான் வேலை நிறுத்தப் போரின் கேந்திரஸ்தானமாகவும் இயக்கம் விரிவடைந்த ஸ்தலமா கவும் விளங்கியது; எனினும் வேறு பல நகரத்துத் தொழி லாளர்களும் மே தினப் போராட்டத்தில் கலந்து கொண் டார்கள். நியூயார்க், பால்டிமோர், வாஷிங்டன், மில்வாக், சின்சின்னட்டி, செயிண்ட்லூயிஸ், பிட்ஸ்பர்க், டெட்ராய்ட் முதலிய நகரத்துத் தொழிலாளர்களும், வேறு பல நகரத்துத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தப் போரில் கலந்து கொண்டார்கள். இந்த வேலை நிறுத்த இயக்கத் தின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இந்த வேலை நிறுத்தத்தில் சங்கம் அமைக்காத தொழிலாளர் களும், அனுபவம் பெறாத தொழிலாளர்களும் கூட

போராட்டத்தில் கவர்ந்திழுக்கப்பட்டுக் கலந்து கொண்டது தான். இந்தச் சமயத்தில் ஆங்காங்கே அனுதாப வேலை நிறுத்தங்களும் அடிக்கடி நடைபெற்றதும் ஒரு முக்கிய அம்சமாகும். நாடு முழுவதும் ஒரு புரட்சி உத்வேகம் பொங்கிப் பரந்து நின்றது. இந்த வேலை நிறுத்தப் போராட்டங்களின் உத்வேகத்தையும், இந்த இயக்கத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்களின் ஆர்வத்தையும் பூர்ஷ்வா வர்க்கச் சரித்திராசிரியர்கள் 'சமுதாய யுத்தம்' என்றும், 'முதலாளிகள் மீது குரோதம்' என்றும் வருணித்தார்கள். மே தினப் போராட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்களில் பாதிப் பேருக்கு மேல் வெற்றிகரமாகப் போராட்டத்தை நடத்தினர்கள். அவர்கள் எட்டு மணி நேர வேலைக் கோரிக்கைப் போரில் வெற்றி காணு விட்டாலும்கூட, வேலை நேரத்தைக் கணிசமான அளவுக்குக் குறைக்கும்படி செய்து வெற்றி கண்டார்கள்.

சிகாகோ வேலை நிறுத்தமும், ஹே மார்க்கெட் போராட்டமும்

மே தின வேலை நிறுத்தப் போர் சிகாகோ நகரில் தான் உக்கிரமாக நடந்தது. அந்தச் சமயத்தில் சிகாகோ நகரம்தான் இடது சாரித் தொழிலாளர் இயக்கத்தின் போராட்ட சக்தியின் கேந்திரஸ்தானமாக விளங்கியது. தொழிலாளர் இயக்கத்தின் பிரச்னைகள் அரசியல் ரீதியில் போதுமான அளவுக்குத் தெள்ளத்தெளிவாக வரையறுக்கப்படவில்லை யென்ருலும்கூட, அந்த இயக்கம் ஒரு மாபெரும் போராட்ட சக்தியாகவே விளங்கியது. தொழிலாளர்களை எந்தச் சமயத்திலும் போராட்டத்துக்கு அறை கூவல் விடுத்து, போராட்டத்தை ஆரம்பிக்கும் சக்தி வாய்ந்ததாகவும், தொழிலாளர்களது

வாழ்க்கைத் தரத்தையும், வேலை நிலைமைகளையும் உடனடியாக உயர்த்துவதற்கான போராட்ட சக்தியை வளர்த்து விடுவதாகவும் இருந்தது. போராட்ட சக்தி வாய்ந்த தொழிலாளர்களின் துணையினால், சிகாகோ வேலை நிறுத்தம் அமோகமான அளவில் பெருகி வலுப்பெற்றது. வேலை நிறுத்தப்போரை ஆரம்பிப்பதற்குமுன்பே, அதற்கு அஸ்திவாரமாக எட்டு மணி நேர வேலைச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இடது சாரித் தொழிற்சங்கங்களால் ஆன மத்திய தொழிலாளர் யூனியன் எட்டு மணி நேர வேலைச் சங்கத்திற்குப் பரிபூரண ஆதரவு அளித்தது. எட்டுமணி நேர வேலைச் சங்கத்தில் தொழிற் சங்கச் சம்மேளனமும், நைட்ஸ் ஆப் லேபர் ஸ்தாபனமும், சோஷியலிஸ்ட் தொழிற் கட்சியும் ஒன்று சேர்ந்திருந்தன. இந்த சோஷியலிஸ்ட் தொழிற் கட்சிதான் அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்திடையே தோன்றிய முதல் அரசியல் பூர்வமான சோஷியலிஸ்ட் ஸ்தாபனமாகும். மே முதல் தேதிக்கு முந்திய ஞாயிற்றுக்கிழமையன்று மத்திய தொழிலாளர் யூனியன் ஒன்றுபட்ட ஐக்கிய அணி வகுப்பு ஒன்றை நடத்திக் காட்டியது. இந்த அணி வகுப்பில் 25,000 தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

மே மாதம் முதல் தேதியன்று சிகாகோ நகரத்தில் ஒரு மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. சிகாகோ நகரத்துத் தொழிலாளர் இயக்கத்தின் அறை கூவலுக்கு இணங்க, தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்தார்கள். அந்த மாதிரியான வர்க்கக்கட்டுப்பாட்டு ஒற்றுமையோடு நடத்தப்பட்ட பிரம்மாண்டமான போராட்டத்தை, தொழிலாளர் இயக்கம் அதற்குமுன் என்றுமே கண்டதில்லை. அந்தச் சமயத்துக் கோரிக்கையான எட்டு மணி நேர வேலைக் கோரிக்கையின் முக்கியத்துவமும், வேலை நிறுத்தத்தின்

விரிவும் தன்மையும் தொழிலாளர் இயக்கத்துக்கே ஒரு புதிய முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் அர்த்த பாவத்தைக் கொடுத்துவிட்டது. இந்த முக்கியத்துவம் மேதினத்தைத் தொடர்ந்து பின்னல் சில நாட்களில் ஏற்பட்ட வளர்ச்சிகளின் மூலம் பிரதானமும் அழுத்தமும் பெற்று விளங்கியது. 1886-ம் வருஷத்து மே முதல் தேதி வேலை நிறுத்தத்தில் வந்து முடிந்த எட்டு மணி நேர இயக்கம் அமெரிக்கத் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்ட சரித்திரத்திலேயே ஒரு மகோந்நதமான அத்தியாயமாக, கால கட்டமாக விளங்கியது.

தொழிலாளிகளின் எதிரிகள் இந்தச் சமயத்தில் கையைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கவில்லை. முதலாளிகளும், நகர சர்க்காரும் கூட்டுச் சேர்ந்ததன்மூலம் பெற்ற ஐக்கிய பலம் சிகாகோ தொழிலாளர்களின் அணிவகுப்பைத் தடுத்து நிறுத்த முனைந்தது; தொழிலாளர் இயக்கத்தின் போராட்டத் தலைவர்களைத் தீர்த்துக்கட்ட முனைவதன் மூலம், சிகாகோ நகரத்தின் தொழிலாளர் இயக்கத்துக்கே சாவு மணி அடித்து விடலாம் என்று கனவு கண்டது. ஹேமார்க்கெட் சம்பவம் என்று அழைக்கப் பெறும், மே மாதம் மூன்றும் நாலாம் தேதிகளில் நடந்த சம்பவங்கள், மே மாதம் முதல் தின வேலை நிறுத்தத்தின் மூலம் ஏற்பட்ட நேரடியான விளைவுகளாகும். மே மாதம் 4-ம் தேதியன்று ஹேமார்க்கெட் சதுக்கத்தில் தொழிலாளர்கள் ஒரு மாபெரும் கூட்டத்தை நடத்தினர்கள். மே மாதம் மூன்றும் தேதியன்று மக்கார்மிக் உழுபடைக் கருவித் தொழிற்சாலையின் தொழிலாளர்கள் நடத்திய கூட்டத்தைப் போலிஸார் மிருகத்தனமாகத் தாக்கியதையும் அதன் காரணமாக அறுவர் மாண்டதையும், பலபேர் படுகாயமடைந்ததையும் கண்டனம் செய்வதற்காக, ஹேமார்க்கெட் கூட்டம் கூடியது. அந்தப் பொதுக்கூட்டம்

அமைதியாக நடந்தது; ஆனால் கூட்டம் முடியப்போகும் தருவாயில், போலீஸார் அங்கு கூடியிருந்த தொழிலாளர்கள் மீது தாக்குதலைப் பிரயோகிக்கத் தொடங்கினார்கள். கூட்டத்துக்குள் ஒரு வெடி குண்டு எரியப்பட்டு விழுந்தது. அதன் காரணமாக, ஒரு சார்ஜெண்ட் கொல்லப்பட்டான். தொழிலாளருக்கும் போலீஸாருக்கும் நடந்த அந்தப்போராட்டத்தில் ஏழு போலீஸ்காரர்களும், நாலு தொழிலாளர்களும் செத்து விழுந்தார்கள். ஹேமார்க்கெட் சதுக்கத்தில் நடந்த ரத்தஸ்நானமும், பார்சன்ஸ், ஸ்பைஸ், பிஷக், ஏஞ்சல் முதலியவர்களைத் தூக்குமேடைக்கு வழியனுப்பி வைத்ததும் சிகாகோ நகரத்துப் போராட்டத் தளபதிகள் கைதானதும், சிகாகோ நகரத்து முதலாளிகளுக்கு ஒரு பதிலாக, சவாலாக விளங்கியது. இந்த நிலையை நாடெங்கிலும் உள்ள சகல முதலாளிகளும் அடக்கு முறைப் பிரயோகம் செய்யவேண்டிய அபாய அறிவிப்பாகக் கருதினார்கள். இதனால், *1886*-ம் வருஷத்தின் பிற் பகுதியில், சகல முதலாளிகளும் *1885-86*-ம் வருஷங்களில் நடந்த வேலை நிறுத்தங்களின் மூலம் தாங்கள் இழக்க நேர்ந்த ஸ்தானத்தை மீண்டும் பெறுவதற்காக, நாடெங்கிலும் ஒருமுகமான அடக்கு முறையைப் பிரயோகிக்கத் தொடங்கினார்கள்.

சிகாகோவின் தொழிலாளர் தலைவர்களைத் தூக்கிவிட்டுக் கொன்ற ஒரு வருஷகாலத்துக்குப் பிறகு, தொழிற் சங்கச் சம்மேளனம் *1888*-ம் வருஷத்தில் செயிண்ட் லூயிஸ் என்ற இடத்தில் கூடியது. அந்த மகாநாட்டில் மீண்டும் எட்டு மணி நேர இயக்கத்தை வலுப்பெறச் செய்யவேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இரண்டு வருஷங்களுக்கு முன் அரசியல் வர்க்கப்போர்ப் பிரச்னையின் அடிப்படையில் கட்டி வளர்க்கப்பட்டதாகவும், பலம் வாய்ந்த இயக்கத்தின் கேந்திர ஸ்தானமாகவும்

விளங்கிய மே மாதம் முதல் தேதி அதற்குள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பொன்னுளாகிவிட்டது. எனவே, எட்டு மணி நேர வேலை இயக்கத்தின் போராட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு மீண்டும் மே மாதம் முதல் தேதியையே தொழிற் சங்கச் சம்மேளனம் தேர்ந் தெடுத்தது. 1890-ம் வருஷம் மே மாதம் முதல் தேதி வேலை நேரக் குறைப்புக்கான தேச மய பூர்வமான ஒரு மாபெரும் வேலை நிறுத்தப் போரை எதிர் நோக்கி நின்றது. 1889-ம் வருஷம் கூடிய மகாநாட்டில் ஸாமுவேல் காம் பெர்ஸின் தலைமையில் இயங்கிய தொழிலாளர் தலைவர்கள் வேலை நிறுத்த இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி கண்டார்கள். வேலை நிறுத்தத்துக்கு மிகவும் தகுதிவாய்ந்த தாகக் கருதப்பட்ட தச்சுத் தொழிலாளர் யூனியன்தான் முதன் முதலில் வேலை நிறுத்தத்தைத் தொடங்கிவைக்க வேண்டுமென்றும், அந்த வேலை நிறுத்தம் வெற்றி தருவதாகத் தோன்றினல், பிற தொழிலாளர் சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்றும் அந்த மகாநாட்டில் தீர்மானித்தார்கள்.

மே தினம் சர்வ தேச மயமாகிறது!

மே தினம் சர்வதேசியத் தொழிலாளர்களின் திரு நாளாக மாறுவதற்கு அமெரிக்கத் தொழிற் சங்கச் சம்மே ளனம் எவ்வாறு உதவியது என்பதைப்பற்றி காம்பெர்ஸ் தமது சுய சரித்திரத்தில் பின் வருமாறு எழுதியிருக்கிருர்: "எட்டு மணி நேர இயக்கத்துக்கான திட்டங்கள் உருவாகி வரும்போதே, நாங்கள் எப்படி எங்கள் கொள்கையை விரி வாகப் பரப்புவது என்பதையும் தொடர்ந்து கவனித்துக் கொண்டு வந்தோம். சர்வ தேசத் தொழிலாளர்களின் மகா நாடு பாரீஸில் கூடப் போகும் தினம் சமீபித்து வரவும்,

எனக்கு ஒரு யோசனை தோன்றியது. எங்களது இயக்கத்துக்கு அந்த மகாநாட்டின் மூலம் அகில உலக அளவில் விரிந்த அனுதாப உணர்ச்சியைப் பெறவேண்டும் என்று நான் திட்டமிட்டேன்.'' சீர்திருத்தவாதக் கொள்கைகளையும் சந்தர்ப்பவாதக் கொள்கைகளையும் காம்பெர்ஸ் ஏற்கெனவே வெளிப்படையாகக் காட்டிக் கொண்டவர்; இந்தக் கொள்கைகள் பின்னர் அவரது வர்க்க சமரசக் கொள்கை வடிவெடுத்த காலத்தில் பச்சையாகப் பகிரங்கமாக அம்பலமாயிற்று. எனினும்கூட, தாம் எந்த சக்தியை தீவிரமாக எதிர்த்துக் கொண்டிருந்தாரோ, அந்த சோஷியலிஸ்டுத் தொழிலாளிகளிடமிருந்து தமது இயக்கத்துக்குக் கிடைக்கும் ஆதரவை அவர் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயிருந்தார்.

1889—ம் வருஷம் ஜுலை மாதம் 14-ம் தேதியன்று, அதாவது பாஸ்டில் வீழ்ச்சியின் நூற்றாண்டு விழாவின் போது, கட்டுப்பாடான சோஷியலிஸ்ட் இயக்கங்களின் தலைவர்களான பல்வேறு நாட்டுத் தலைவர்கள் பாரீஸில் கூடினார்கள். அவர்கள் மீண்டும் அகில உலகத் தொழிலாளர்களின் ஸ்தாபனத்தை நிறுவினார்கள்; தங்களது மாபெரும் போதகர்களான கார்ல் மார்க்ஸ், பிரடெரிக் ஏஞ்சல்ஸ் முதலியவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன் நிறுவிய அதே அடிப்படையில் மீண்டும் தொழிலாளர் ஸ்தாபனத்தை உருவாக்கினார்கள். "இரண்டாவது கம்யூனிஸ்டு அகில ஸ்தாபனம்'' என்று பின்னர் அழைக்கப்படவிருந்த அந்த ஆரம்பக் கூட்டத்தில், 1884-86—ம் வருஷங்களில் அமெரிக்காவில் நடந்த எட்டு மணி நேர இயக்கப் போராட்டத்தைப் பற்றியும், மீண்டும் அந்த இயக்கம் புத்துயிர் பெற்று வருவது பற்றியும் அமெரிக்கப் பிரதிநிதிகள் அங்கு குழுமியிருந்த தலைவர்களிடம் எடுத்துச் சொன்னார்கள். அமெரிக்கத் தொழிலாளர்களின் உதாரண பூர்வமான

போராட்டத்தைக் கேட்டுக் களிப்புக் கொண்ட அந்தப் பாரீஸ் மகாநாடு பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது:

"இந்தக் காங்கிரஸ் ஒரு மாபெரும் சர்வதேசியப் போராட்டத்தைத் தொடங்கி வைக்கத் தீர்மானிக்கிறது. அந்தப் போராட்டத்தின் மூலம் எல்லா நாடுகளிலும், எல்லா நகரங்களிலும் ஒரு குறிப்பிட்ட தினத்தில் சகல தொழிலாளி மக்களும் ஒன்று சேர்ந்து நின்று, தங்களது வேலை நேரத்தை எட்டு மணி நேரமாகக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்காக, சர்க்கார் அதிகாரிகளை வற்புறுத்திக் கேட்கும் போராட்டத்தைத் தொடங்க வேண்டும்; அத்துடன் அவர்கள் பாரீஸ் காங்கிரஸின் பிற தீர்மானங்களையும் நிறைவேற்றப் பாடுபட வேண்டும். அமெரிக்கத் தொழிற் சங்கச் சம்மேளனம் 1888—ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் ஸெயிண்ட் லூயிஸில் கூடிய மகா நாட்டில், 1890—ம் வருஷம் மே மாதம் முதல் தேதியன்று இது போன்றதொரு இயக்கத்தை தொடங்குவதென்று தீர்மானித்திருப்பதால், அதே மே தினத்தையே சர்வ தேசிய ஆர்ப்பாட்டத்துக்கும் உரிய நாளாக இந்தக் காங்கிரஸ் ஒப்புக் கொள்கிறது. பல்வேறு நாட்டுத் தொழிலாளர்களும் தங்கள் தங்கள் நாட்டில் நிலவும் நிலைமைகளுக்குத் தக்கவாறு, இந்த இயக்கத்தைத் தொடங்கி நடத்த வேண்டும்."

1890—ம் வருஷத்தில் மே தினம் பல ஐரோப்பிய நாடுகளிலும் கொண்டாடப்பட்டது. சோஷியலிஸ்ட் தலைவரான பீட்டர் மக்குயர் என்பவரின் தலைமையில் இயங்கிய அமெரிக்கத் தச்சுத் தொழிலாளர் யூனியனும் வேறுபல தொழிலாளர்களும் இந்தத் தினத்தன்று எட்டுமணி நேர வேலைக் கோரிக்கைக்காக ஒரு பொது வேலை நிறுத்தத்தை தொடங்கி வைத்தார்கள். சோஷியலிஸ்டுகளுக்கு எதிராக

"விதி விலக்கான சட்டங்கள்" இருந்தபோதிலும்கூட, ஜெர்மன் தேசத்துத்தொழில் கேந்திர நகரங்களிலெல்லாம் மே தினக் கொண்டாட்டம் நடந்தேறியது. இதுபோலவே பிற ஐரோப்பிய நகரங்களிலும் மே தினம் கொண்டாடப் பட்டது. அதிகாரிகள் எச்சரிக்கை செய்தபோதிலும்கூட, இயக்கத்தையே அடக்கி ஒடுக்கிவிட முயன்றபோதிலும் கூட, ஆர்ப்பாட்டம் நடக்கத்தான் செய்தது. அமெரிக்கா வில் சிகாகோவிலும், நியூயார்க்கிலும் நடந்த இயக்க ஆர்ப் பாட்டங்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் எட்டுமணி நேரக் கோரிக்கையை அறை கூவியவாறு தெருக்களில் 'அணி வகுத்துச் சென்றூர்கள். முக்கிய இடங்களில் அணி வகுத்துச் செல்லும் தொழிலாளர்கள் கடைசியாக பொதுக் கூட்டம் கூடித் தீர்மானங்கள் நிறைவேற்றினர்கள்.

1891—ம் வருஷத்தில் பிரஸ்ஸல்ஸில் கூடிய அடுத்த கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனக் காங்கிரஸின்போது, 'எட்டு மணி நேர வேலைக் கோரிக்கைக்காக மே மாதம் முதல் தேதி யைப் ஆர்ப்பாட்ட தினமாகக் கொள்ளவேண்டும்' என்ற தீர்மானத்தை மீண்டும் வற்புறுத்தியதோடு மட்டுமல்லா மல், அதே தினத்தைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கான கோரிக்கைக்காகவும், தேசங்களுக்குள் சமா தானத்தை நிலவச் செய்யும் காரியத்துக்காகவும் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது. எட்டுமணி நேரக் கோரிக்கைக்காகவும் பிற கோரிக்கைகளுக்காகவும் தொடங்கப்பெறும் மே தின ஆர்ப்பாட்டங்களின் வர்க்க உணர்ச்சித் தன்மையின் முக்கி யத்துவத்தை, அதாவது இவற்றின்மூலம் 'வர்க்கப் போராட்டத்தை வலுப்பெறச் செய்வதன்' முக்கியத்து வத்தை இந்தக் காங்கிரஸின் திருத்தப்பட்ட புதிய தீர்மானம் வற்புறுத்திக் கூறியது. மே தினத்தன்று

வேலை நிறுத்தம் செய்யவேண்டும் என்பது நிபந்தனை பூர்வமான குறிப்புத்தான் என்றாலும், கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனம் அந்த ஆர்ப்பாட்டங்களின் காரண காரியக் கொள்கைகளை விஸ்தரித்து ஒன்றுபடுத்தவும் முனைந்தது. மே தினத்தன்று வேலை நிறுத்தம் செய்யவேண்டும் என்ற நிபந்தனையைக்கூட ஒப்புக்கொள்ள மறுத்து, தங்களது சந்தர்ப்ப வாதத்தை வெட்ட வெளிச்சமாக்கினார்கள், இங்கிலாந்தின் லேபர் கட்சிக்காரர்கள். மேலும், அவர்களும், ஜெர்மன் சோஷியல் டெமாக்ரெட் கட்சியினரும் ஒன்று சேர்ந்து மே தினக் கொண்டாட்டத்தை மே மாதம் முதல் தேதியன்று கொண்டாட வேண்டாம் என்றும், முதல் தேதிக்கு அடுத்துவரும் ஞாயிற்றுக் கிழமைக்கு மே தினக் கொண்டாட்டத்தை ஒத்தி போடுவது என்றும் தீர்மானித்தார்கள்.

சர்வ தேசீய மே தினத்தைப்பற்றி ஏஞ்சல்ஸ்

1890—ம் வருஷத்தில் மே மாதம் முதல் தேதியன்று, கம்யூனிஸ்ட் பிரகடனத்தின் நாலாவது ஜெர்மன் பதிப்புக்கு எழுதிய முன்னுரையில் ஏஞ்சல்ஸ் சர்வதேசத் தொழிலாளர் சங்கங்களின் சரித்திரத்தைப் பரிசீலனை செய்துவிட்டு, முதன்முதல் நடந்த சர்வதேசிய மே தினக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"இந்த வரிகளை நான் எழுதும்போது, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள தொழிலாளர் வர்க்கம் தமது சக்திகளைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். முதன் முதலாக, அவர்கள் ஒரே படையாகத் திரண்டு, ஒரே கொடியின் கீழ், ஒரே ஒரு உடனடிக் கோரிக்கைக்காக ஒன்றுபட்டு நிற்கிறார்கள். எட்டுமணி நேர வேலையைச்சட்ட

பூர்வமாக்குவதுதான் அந்தக் கோரிக்கை...நாம் கண்டானந்திக்கும் இந்தக் கண்கொள்ளாக்காட்சி, உண்மையில் உலகத்தின் சகல நாடுகளிலுமுள்ள தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டு விட்டது என்ற நிதர்சன பூர்வமான உண்மையை, சகல நாட்டிலுமுள்ள முதலாளிகளும் பெருநிலக் கிழவர்களும் உணர்ந்து கொள்ளும் காட்சியாக விளங்குகிறது. இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக்காண மார்க்ஸ் மட்டும் இப்போது என்னுடன் இருந்தால்!"

சர்வதேச ரீதியில் ஒரே சமயத்தில் நடந்த இந்தத் தொழிலாளர் ஆர்ப்பாட்டத்தின் முக்கியத்துவம் உலகெங்கனும் உள்ள சகல தொழிலாளர்களின் எண்ணத்தையும், புரட்சியுணர்ச்சிகளையும் கவர்ந்திழுத்து ஆகர்ஷித்தது. ஒவ்வொரு வருஷத்திலும் மேலும் மேலும் எண்ணற்ற தொழிலாளர்கள் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டதைக் காணமுடிந்தது.

1893-ம் வருஷத்தில் ஜூரிச்சில் கூடிய கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனத்தின் மகாநாட்டில் மே தினத் தீர்மானத்தோடு, பின்வரும் தீர்மானத்தையும் சேர்த்து நிறைவேற்றியதானது இந்த இயக்கத்துக்குத் தொழிலாளர்கள் எவ்வளவு தூரம் ஆர்வம் காட்டினார்கள் என்பது புலப்படும். இந்த மகாநாட்டில் ஏஞ்செல்சும் பிரசன்னமாயிருந்தார்.

" அதே சமயத்தில் எட்டு மணி நேர வேலைக்கான மே தின ஆர்ப்பாட்டம் தொழிலாளர் வர்க்கத்தின் உறுதி வாய்ந்த உணர்ச்சிப் போராட்டமாக, சமுதாய மாறுதலின் மூலம் வர்க்க பேதங்களை ஒழித்துக்கட்டும் 'போராட்டமாக விளங்க வேண்டும்; அதன் மூலம் அது சரியான பாதையில், சகல மக்களுக்கும், சர்வதேசத்துக்கும்

சமாதானத்தை வழங்கக்கூடிய பாதையில், அந்த ஒரே ஒரு பாதையில் திரும்ப வேண்டும்."

மே தின ஆர்ப்பாட்டங்களைப் போராட்ட தினங்களாக மாற்ருமல், ஒய்வு நாட்களாகவும், பொழுது போக்கு நாட்களாகவும் திசை மாற்றித் திருப்பிவிட்டு, மே தின ஆர்ப்பாட்டத்தின் வலிமையைக் குறைக்கப் பல்வேறு கட்சிகளின் சீர்திருத்தவாதத் தலைவர்களும் முயன்று பார்த்தார்கள். எனவேதான் அவர்கள் மே மாதம் முதல் தேதிக்கு அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமையில் ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை யென்ருல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடியாது; ஏனெனில் ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டியதேயில்லை. சீர்திருத்தவாதத் தலைவர்களுக்கோ மே தினம் என்பது சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் விடுமுறை நாளாக, பூங்காக்களிலும் நகர்ப்புறங்களிலும் நடக்கும் கேளிக்கைக் கூத்தாகவும், திருவிழாவாகவும் தான் தோன்றியது. ஆனுல், ஜூரிச் மகா நாட்டின் தீர்மானமோ மே தினத்தை, "வர்க்க பேதங்களை ஒழிப்பதற்காகத் தொழிலாளர் வர்க்கம் உறுதியோடு போராடும் போராட்டமாக" இருக்கவேண்டும் என்று கோரியது. அதாவது, கூலி அடிமைத்தனமும் சுரண்டலும் நிறைந்த முதலாளித்துவ சமுதாய அமைப்பை ஒழித்துக்கட்டுவதற்கு நடக்கும் ஒன்றுபட்ட ஏகாக்கிர சிந்தை கொண்ட போராட்டமாக இருக்க வேண்டும் என்று கூறியது. ஆனுல், இதைப்பற்றியெல்லாம் சீர்திருத்த வாதிகள் கவலைப்படவில்லை. ஏனெனில், சர்வதேசிய மகா நாடுகளின் தீர்மானத்துக்குத் தாங்களும் கட்டுப்பட்டவர்கள் என்று அவர்கள் கருதவில்லை. சர்வதேசிய மகா நாடுகள் அவர்களைப் பொறுத்தவரை நல்லெண்ணத்தையும் சர்வதேசிய

கட்புரிமையையும் பரிமாறிக் கொள்ளும் சர்வ சாதாரணக் கூட்டங்களாகவே இருந்தன. யுத்தத்துக்கு முன்னால் பல்வேறு ஐரோப்பிய நகரங்களில் அவ்வப்போது கூடிய எத்தனையோவித மகா நாடுகளைப் போலத்தான் கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபன மகா நாடுகளையும் அவர்கள் கருதி வந்தார்கள். சர்வதேசிய ரீதியில் ஒன்றுபட்டு இயங்கும் தொழிலாளி வர்க்கத்தின் இயக்கத்தை அவர்கள் குறை கூறினார்கள்; கண்டித்தார்கள். மேலும் அவர்களது கருத்துக்களுக்கு ஒவ்வாதிருந்த சர்வதேசிய மகா நாடுகளின் தீர்மானங்களை அவர்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காய்த் தீர்மானங்களாகவே கருதினார்கள். இருபது வருஷ காலத்துக்குப் பிறகு, இந்தச் சீர்திருத்த வாதிகளின் 'சோஷியலிஸமும்' "சர்வதேசியமும்" வெட்ட வெளிச்சத்துக்கு வந்து சக்தி சிரிக்க நிற்கலாயின. 1914-ம் ஆண்டில், கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனமும் சிதறுண்டு கிடந்தது. ஏனெனில் அது பிறப்பெடுத்த காலத்திலேயே, அதனுள் அதன் அழிவுக்கான விஷவித்துக்கள்...அதாவது தொழிலாளி வர்க்கத்தைத் தவருன வழியில் செலுத்தும் சீர்திருத்த வாதத்தலைவர்கள் புகுந்து விட்டார்கள்.

1900-ம் வருஷத்தில் பாரீஸில் கூடிய கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபன மகா நாட்டில், அதற்கு முந்திய மகாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட மே தினத் தீர்மானம் மீண்டும் நிறைவேற்றப்பட்டது; மேலும், மே மாதம் முதல் தேதியன்று வேலை நிறுத்தம் செய்தால், அந்த ஆர்ப்பாட்டம் வலுப் பெற்றதாக விளங்கும் என்ற உண்மை அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்திக் கூறப்பட்டது. வர வர, மேலும் மேலும் மே தின ஆர்ப்பாட்டங்கள் சக்தி வாய்ந்த ஆர்ப்பாட்டங்களாக மாறிக் கொண்டிருந்தன. ஆர்ப்பாட்டங்களில் பங்கெடுக்கும் தொழிலாளர் எண்ணிக்

கையும், வேலை நிறுத்தமும் ஒவ்வொரு வருஷமும் அதிகரித்துக் கொண்டு வந்தன. மே தினம் செந்தினம் (சிவப்பு தினம்: புரட்சி தினம்) ஆயிற்று. ஒவ்வொரு மே தினம் வரும்போதும், உலகெங்கிலும் உள்ள அதிகார வர்க்கத்தின் பிற்போக்கு வட்டாரங்களில் குளிர் எடுத்து ஆட்டத் தொடங்கியது.

மே தினத்தைப் பற்றி லெனின்

ருஷ்ய நாட்டின் புரட்சி இயக்கத்தின் ஆரம்ப கட்டத்திலேயே மே தினத்தை ஆர்ப்பாட்ட தினமாகவும், போராட்ட தினமாகவும் ருஷ்யத் தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தி வைப்பதில் லெனின் வெற்றி கண்டார். 1896-ம் வருஷத்தில் லெனின் சிறையிலிருந்த காலத்தில், ருஷ்யாவின் முதல் மார்க்ஸிய அரசியல் குழுவாக இயங்கிய "ஸெயிண்ட் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களின் விடுதலைப் போராட்ட யூனியனு"க்காக, லெனின் ஒரு மே தின அறிக்கையை எழுதினர். அந்த அறிக்கை சிறைக்கு வெளியே கடத்திக்கொண்டு வரப்பட்டது. அந்த அறிக்கை 2000 'ஸைக்ளோஸ்டைல்' பிரதிகள் எடுக்கப்பட்டு 40 தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் மத்தியில் வினியோகிக்கப்பட்டது. அந்த அறிக்கை சுருக்கமாகவும், லெனினுக்கே உரிய எளிய நேரடியான நடையோடும் இருந்தது. எனவே, வர்க்க உணர்ச்சி பெற்று வளராத தொழிலாளிகளுக்கும் கூட, அந்த அறிக்கை லகுவில் புரியக் கூடியதாயிருந்தது. "ஒரு மாத காலத்துக்குப் பின்னர், அதாவது 1896-ம் வருஷத்தின் பிரபலமான துணித் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்ட போது, லெனினின் அந்தச் சின்னஞ்சிறு மே தின அறிக்கைதான் தங்களுக்கு முதன் முதலில் போராட்ட உணர்ச்

சியை ஊட்டியது என்று தொழிலாளர்கள் எங்களிடம் சொன்னார்கள்'' என்று அந்த அறிக்கையை வெளிக் கொண்டு வருவதில் ஒத்துழைத்த லெனின் காலத்துத் தோழர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தாங்கள் வேலைபார்க்கும் தொழிற்சாலைகளின் சொந்தக்காரர்களின் நலன்களுக்காகத் தாம் எப்படிச் சுரண்டலுக்கு ஆளாகினார்கள் என்பதையும், தங்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டும் என்று தொழிலாளர்கள் கோரும்போது, எப்படி சர்க்கார் அவர்களைப் பழிவாங்குகிறது என்பதையும், லெனின் அந்த அறிக்கையில் தொழிலாளர்களுக்கு எழுதித் தெரிவித்துவிட்டு, அதன் பிறகு மே தினத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதத் தொடங்குகிறார். அவர் எழுதியதாவது:

"பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய பல் வேறு நாடுகளிலும் தொழிலாளர்கள் சக்தி வாய்ந்த தொழிற் சங்கங்களின் கீழ் ஒன்றுபட்டு நின்று, தங்களது பல உரிமைகளைப் போராடிப் பெற்று வெற்றி கண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகள் ஏப்ரல் மாதம் 19-ம் தேதியன்று (அதாவது மே முதல் தேதி, மேற்கு ஐரோப்பிய மாதக் கணக்குக்கு ருஷ்ய மாதக் கணக்கு 13 நாட்கள் பிந்தி வருவதாகும்) ஒன்றுபட்டு நின்று, அன்றைய தினத்தைத் தொழிலாளர்களின் பொது விடுமுறை தினமாக நடத்தினார்கள். அவர்கள் தங்களைக் கசக்கிப் பிழியும் தொழிற்சாலைகளை விட்டு வெளியேறி, பட்டொளி வீசிப் பறக்கும் பாவட்டாக்களோடும், சங்கீத கோலாகலத்தோடும் நகரத்தின் பிரதான வீதிகளெங்கும் அணி வகுத்துச் செல்கிறார்கள்; இடையறாது வளர்ந்தோங்கும் தங்களது மகாசக்தியைத் தங்களது முதலாளிமார்களுக்குப் புலப்படுத்திக் காட்டுகிறார்கள்; மாபெரும் ஆர்ப்பாட்டங்களில் பங்கெடுத்து மாபெரும் கூட்டமாகக்

குழுமுகிருர்கள்; அந்தக் கூட்டங்களில் சென்ற வருஷத்தில் அவர்கள் தங்களது முதலாளிகளிடமிருந்து போராடிப் பெற்ற வெற்றிகளைப்பற்றியும், வரப்போகும் எதிர் காலத்துக்குரிய போராட்ட திட்டங்களைப் பற்றியும் பிர சங்கங்கள் செய்கிருர்கள்; மே தினத்தன்று வேலைக்கு வராத தொழிலாளர்களுக்கு, தொழிற்சாலை முதலாளிகள் அபராதம் போடக்கூடப் பயப்படுகிருர்கள்; ஏனெனில் அபராதம் விதித்தால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடும் என்று அஞ்சுகிருர்கள்; இந்தத் தினத் தன்று தொழிலாளர்கள் தங்கள் முதலாளிகளுக்குத் தங்களது பிரதான கோரிக்கையான 'எட்டு மணி நேர வேலை, எட்டு மணி நேர ஓய்வு, எட்டு மணி நேரப் பொழுது போக்கு' என்ற கோஷத்தை ஞாபகப்படுத்துகிருர்கள். பிற நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் இன்று கோரும் கோரிக்கை இதுதான்."

ருஷ்யப் புரட்சி இயக்கம் மே தினத்தைப் பெரிய அளவில் பயன்படுத்திக்கொண்டது. 'கார்க்கோவில் மே தினங்கள்' என்ற தலைப்பில் 1900-ம் வருஷம் நவம்பர்மாதம் எழுதிய நூலின் முகவுரையில், லெனின் பின்வருமாறு எழுதினர்:

" இன்னும் ஆறுமாத காலத்தில், வரப்போகும் புதிய நூற்ருண்டின் முதல் வருஷத்தின் முதல் மே தினத்தை ருஷ்யத் தொழிலாளர்கள் கொண்டாடுவார்கள். எனவே, அந்தக் கொண்டாட்டங்களைக் கூடிய வரையிலும் பெரும் பாலான இடங்களில் நடத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு நமக்குக் காலம் நெருங்கி விட்டது. அந்தப் போராட்டங்களில் ஏராளமான பேர்கள் கலந்து கொள்வது மட்டும் போதாது ; அப்படிக் கலந்து கொள்பவர்களின் கட்டுப்பாட்டுணர்ச்சியைப் பிரதிபலிப்பதா யிருக்க வேண்டும்; வர்க்க உணர்ச்சியைப்

பிரதிபலிப்பதா யிருக்கவேண்டும்; ருஷ்ய மக்களின் அரசியல் விடுதலைக்கான, அடக்கி ஒடுக்கிவிட முடியாத மாபெரும் போராட்டத்தைத் தொடங்குவதற்கான, உறுதியுணர்ச்சியைச் சுட்டிக் காட்டுவதாக இருக்கவேண்டும்; அதன் விளைவாகத் தொழிலாளர்களின் வர்க்க வளர்ச்சிக்குத் தங்கு தடையற்ற சந்தர்ப்ப வசதிக்கும் சோஷியலிஸத்துக்கான பகிரங்கப் போராட்டத்துக்கும் வழி கோலுவதாகவும் இருக்கவேண்டும். எனவே, அந்தப் போராட்டங்கள் பிரம்மாண்டமான அளவில் குறிப்பிடத்தக்க முறையில் நடத்தப் பெறவேண்டும்.''

மே தினம் வருவதற்கு ஆறுமாத காலத்துக்கு முன்பே அதற்கான காரியங்களைக் கவனித்துக் கொண்டு வருகிறார் லெனின்; இதன் மூலம் லெனின் மே தினத்தை எவ்வளவு முக்கியமானதாகக் கருதினார் என்பது புலனாகும். "ருஷ்ய !மக்களின் அரசியல் விடுதலைக்கான அடக்கி ஒடுக்கிவிட முடியாத மாபெரும் போராட்ட"துக்கும், "தொழிலாளர்களின் வர்க்க வளர்ச்சிக்கும், சோஷியலிஸத்துக்கான பகிரங்கப் போராட்டத்துக்கும்" வழி கோலிச் செல்லும் முன்னணிப் பாதையாகத்தான் மே தினம் லெனினுக்குப்பட்டது.

மே தினக் கொண்டாட்டங்கள் "எப்படி மாபெரும் அரசியல் ஆர்ப்பாட்டங்களாக மாறமுடியும்'' என்பதைப் பற்றிக் கூறும்போது, லெனின் 1900—ம் வருஷத்தில் கார்கோவ் தொழிலாளர்கள் • நடத்திய மே தினக் கொண்டாட்டம் ஏன் "பெரியதொரு முக்கியத்துவம் கொண்ட சம்பவமாக'' விளங்குகிறது என்ற கேள்வியைத் தமக்குத் தாமே எழுப்பிக்கொண்டு, தாமே அதற்குப் பதிலும் அளிக்கிறார். "வேலைநிறுத்தத்தில் பெரிய அளவில் தொழிலாளர்கள் பங்கெடுத்துக்கொண்டது, தெருக்களில் கூடிய மாபெரும் பொதுக் கூட்டங்கள், செங்கொடிகள்

பட்டொளி வீசிப் பறந்தது, துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டிருந்த கோரிக்கைகள், எட்டுமணி நேர வேலை, அரசியல் சுதந்திரம் என்னும் இந்தக் கோரிக்கைகளில் பொதிந்திருந்த புரட்சி யம்சம்'' முதலியவற்றை லெனின் சுட்டிக் காட்டினர்.

கார்க்கோவ் கட்சித் தலைவர்கள் எட்டுமணி நேர வேலைக் கோரிக்கையைப் பிற சில்லரைக் கோரிக்கைகளோடும், முழுக்க முழுக்கப் பொருளாதார பூர்வமான கோரிக்கைகளோடும் சம்பந்தப் படுத்தியதை லெனின் கண்டித்தார்; ஏனெனில், மே தினத்தின் அரசியல் முக்கியத்துவம் எந்த விதத்திலும் மங்கி மறைந்துவிடக் கூடாது என்று லெனின் விரும்பினர். அவர் தமது முன்னுரையில் பின் வருமாறு எழுதுகிறர்:

“இந்தக் கோரிக்கைகளில் முதலாவதான கோரிக்கை (அதாவது எட்டுமணி நேர வேலைக் கோரிக்கை) சகல நாட்டிலுமுள்ள தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கையாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கோரிக்கையை முதல் கோரிக்கையாக வைத்ததன் உண்மையென்ன வென்ருல், கார்க்கோவிலுள்ள முன்னேற்றம் அடைந்துள்ள தொழிலாளர்கள் சர்வதேசியசோஷியலிஸத் தொழிலாளர் இயக்கத்தோடு தாமும் ஒன்றுபட்டு நிற்கும் ஐக்கியத்தைத்தான் புலப்படுத்துகிறது. ஆனல், இந்தக் காரணத்துக்காக மட்டும், இந்த மாதிரியான ஒரு கோரிக்கையைக் கொண்டுபோய், ‘தொழிற்சாலைக் கங்காணிகளால் தொழிலாளர்கள் நன்கு நடத்தப்பட வேண்டும்,’ ‘கூலியில் பத்து சதவிதம் அதிகரிப்பு வேண்டும்’ என்பன போன்ற சில்லரைக் கோரிக்கைகளோடு சம்பந்தப்படுத்தி யிருக்கக்கூடாது. எட்டுமணி நேரவேலைக் கோரிக்கை, தொழிலாளர் வர்க்கம் முழுமைக்குமுரிய கோரிக்கைதான். என்ருலும், இந்தக் கோரிக்கையை

நாம் தனிப்பட்ட முதலாளிகளின் முன்னர் சமர்ப்பிக்க வில்லை. அதற்குப் பதிலாக, அரசாங்கத்தின் முன்னால், இன்றைய சமுதாய அரசியல் அமைப்பு முழுமைக்கும் முன்னால், முதலாளித்துவ வர்க்கத்தின் முழுமைக்கும் முன்னால், சகலவிதமான உற்பத்திச் சாதனங்களையும் தம தாக்கிக் கொண்டிருக்கும் முதலாளிகளின் முன்னால் சமர்ப் பிக்கும் கோரிக்கையாகக் கருதுகிறோம்."

மே தினத்தின் அரசியல் கோஷங்கள்

சர்வதேசத் தொழிலாளர்களுக்கும் மே தினக் கொண்டாட்டங்கள் கேந்திர ஸ்தானங்களாக விளங்கின. மே தினத்தின் அசல் கோரிக்கையான எட்டு மணி நேரக் கோரிக்கையோடு, வேறு பல முக்கியத்துவம் வாய்ந்த கோஷங்களும் இணைக்கப்பட்டன. இந்தக் கோஷங்களின் மூலம் மே தின வேலை நிறுத்தங்களிலும் ஆர்ப்பாட்டங் களிலும் தொழிலாளர்களை ஒன்று பட்டு நிற்குமாறு அறை கூவல்விடப்பட்டது. அந்தக்கோஷங்களாவன: சர்வதேசீய தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமை; எல்லோருக்கும் ஓட்டுரிமை; ஏகாதிபத்திய யுத்தத்துக்கும், காலனி ஆதிக் கத்துக்கும் எதிர்ப்பு; கூட்டம் கூடும் உரிமை; அரசியல் கைதிகளின் விடுதலை; தொழிலாளி வர்க்கத்துக்கு அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சங்கம் அமைக்கும் உரிமை முதலியனவாகும்.

பழைய கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனம் மே தினத் தைப் பற்றிக் கடைசியாகப் பேசியது 1904-ம் வருஷத்தில் ஆம்ஸ்டெர்டாமில் நடந்த மகாநாட்டின் போதுதான். மே தின ஆர்ப்பாட்டங்களில் பிரயோகிக்கப்படும் அரசியல் கோஷங்களை விமர்சனம் செய்த பின்னரும், இன்னும் சில

நாடுகளில் மே தினக் கொண்டாட்டங்களை மே மாதம் முதல் தேதியன்று கொண்டாடாமல், ஞாயிற்றுக் கிழமைகளில் கொண்டாடி வருவதைக் கண்டுணர்ந்த பின்னரும், கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனம் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது:

"ஆம்ஸ்டெர்டாமில் கூடும் இந்த அகில உலக சோஷியலிஸ்ட் மகாநாடு, எட்டு மணி நேர வேலையைச் சட்ட பூர்வமாக்குவதற்காகவும், தொழிலாளர்களின் வர்க்கக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவும், சர்வ தேச சமாதானத்துக்காகவும், மே மாத முதல் தேதியன்று ஆர்வத்தோடு ஆர்ப்பாட்டங்கள் நடத்த வேண்டுமென்று சகல சோஷியல் டெமாக்ரெடிக் கட்சி ஸ்தாபனங்களையும், சகல நாட்டுத் தொழிலாளர் ஸ்தாபனங்களையும் அறைகூவி அழைக்கிறது. மே தினக் கொண்டாட்டத்தைச் சிறந்த பயனுள்ள முறையில் கொண்டாடுவதற்குரிய மார்க்கம் வேலை நிறுத்தம்தான். எனவே இந்த மகாநாடு சகல நாட்டுத் தொழிலாளர் ஸ்தாபனங்களையும், தொழிலாளர்களுக்குத் தொல்லை விளைவிக்காத முறையில், எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் மே மாதம் முதல் தேதியன்று வேலை நிறுத்தம் செய்யுமாறு ஆக்ஞாபிக்கிறது."

1912-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் சைபீரியாவிலுள்ள லேனா தங்கச் சுரங்க வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட தொழிலாளிகள் படுகொலைக்கு ஆளானபோது, ருஷ்ய நாட்டின் அன்றைய உடனடி நடவடிக்கையாக, தொழிலாளர்களின் மாபெரும் புரட்சி இயக்கத்தைத் தொடங்கும் பிரச்னை மீண்டும் மேலோங்கியது. அந்த வருஷத்தின் மே தினத்தின்போது பல்லாயிரக் கணக்கான ருஷ்யத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள்; ஜார் ஆட்சியின் பிற்போக்குத் தனத்துக்குச் சவால் விடுத்து, தெருக்களில் பகிரங்கமாகக் கூடினார்கள்;

1905-ம் வருஷத்தில் நடந்த முதல் ருஷ்யப் புரட்சியின் தோல்விக்குப் பின்னரும்கூட இந்தப் போராட்ட உத்வேகம் நிலைத்து நின்றது. லெனின் இந்த மே தினத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதினர்:

"ருஷ்ய நாடெங்கிலும் தொழிலாளர்கள் நடத்திய மே தின வேலை நிறுத்தம், அந்த வேலை நிறுத்தத்தோடு சம்பந்தப்பட்ட பகிரங்க ஆர்ப்பாட்டங்கள், புரட்சிகரமான பிரகடன கோஷங்கள், தொழிலாளர் சமூகத்துக்குப் பேசிய புரட்சிப் பிரசங்கங்கள் முதலியன எல்லாம் உத்வேகம் பெற்று மேலோங்கிவரும் புரட்சி நிலைமைக்கான கால கட்டத்துக்குள் ருஷ்ய நாடு மீண்டும் பிரவேசித்து விட்டது என்பதைத்தான் சுட்டிக் காட்டுகின்றன."

முதலாம் உலக யுத்தத்தின்போது மே தினம்

சோஷியல் டெமாக்ரெடிக் தலைவர்கள் யுத்த காலத்தில் தொழிலாளர் இயக்கத்தைக் காட்டிக்கொடுத்த ரகசியம் 1915-ம் வருஷத்து மே தினத்தின்போது வெட்ட வெளிச்சமாயிற்று. 1914-ம் வருஷத்தில் ஆகஸ்ட் மாதத்தில் ஏகாதிபத்திய அரசாங்கங்களோடு அவர்கள் செய்து கொண்ட வர்க்க ஒப்பந்தத்தின் தர்க்க பூர்வரீதியான விளைவுதான் அது. ஜெர்மானிய சோஷியல் டெமாக்ரெடிக் கட்சித் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டது; பிரஞ்சு நாட்டு சோஷியலிஸ்ட் கட்சி ஒரு பிரத்தியேக அறிக்கையின் மூலம் மே மாதப் பிறப்பைப் பற்றி அதிகார வர்க்கம் கவலை கொள்ளவேண்டியதில்லை என்று கையடித்துக்கூறி அபயம் அளித்தது. யுத்தத்தில் ஈடுபட்டிருந்த பிற நாடுகளிலுள்ள பெரும்பான்மையான சோஷியலிஸ்ட்களும் இதே கொள்கையைத்தான் கடைப்பிடித்தார்கள் என்

பதைக் கண்டு கொள்ளலாம். ருஷ்ய நாட்டிலுள்ள போல்ஷ்விக் கட்சியும், பிறநாடுகளிலுள்ள சிறு பான்மை யான புரட்சிக் கட்சியினரும்தான் சோஷியலிஸத்துக்கும் சர்வ தேசியத்துக்கும் மாறுபடாத உண்மையான கட்சி களாகத் திகழ்ந்தன. சமுதாய சனதனத்தின் (சோஷியல் சாவினிஸம்) பித்தலாட்டத்துக்கு எதிராக, லெனின், லக்ஸம்பர்க், லீப்னெச்ட் முதலியவர்களின் குரல்கள் ஓங்கி ஒலிசெய்தன. *1916*-ம் வருஷத்து மே தினத்தின்போது நடந்த அரைகுறை வேலை நிறுத்தங்களாலும், தெருக் களில் கூடிய அணிவகுப்புக்களாலும், யுத்தத்தில் ஈடு பட்டுள்ள நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் எவ்வாறு தங்களது துரோகித் தலைவர்களின் விஷம் பாய்ந்த ஆதிக்கத்திலிருந்து தங்களைத் தாமே எப்படி விடுவித்துக் கொண்டுவந்தார்கள் என்பது புலனாயிற்று. லெனினுக்கும், பிற புரட்சிக்காரர்கள் அனைவருக்கும், "சந்தர்ப்பவாதத் தின் தோல்வி (அதாவது இரண்டாம் கம்யூனிஸ்ட் அகிலத்தின் சிதைவு) தொழிலாளர் இயக்கத்துக்கு நன்மை பயப்பதாக இருந்தது;" மேலும், புதிய கம்யூனிஸ்ட் அகில ஸ்தாபனத்தை அமைப்பதற்கும், துரோகிகளின் ஆதிக்கத்திலிருந்து தொழிலாளர்களை விடுவிப்பதற்கும் லெனின் விடுத்த அறைகூவல் அந்தச் சந்தர்ப்பத்தின் அத்தியாவசியமான கோரிக்கையாக விளங்கியது.

ஏகாதிபத்திய யுத்தத்தை உள் நாட்டு யுத்தமாகத் திருப்பிவிட வேண்டும் என்று லெனின் எழுப்பிய கோஷத்தின் அடிப்படையில், *1915*-ம் ஆண்டில் ஜிம்மர் வால்டிலும், *1916*-ம் ஆண்டில் கின்தாலிலும் கூடிய சோஷியலிஸ்ட் மகாநாடுகள் சர்வ தேசியப் புரட்சிக் கட்சி களையும் சிறுபான்மையோரையும் ஒன்றுபடுத்தும் முயற்சி யில் வெற்றி கண்டன. *1916*-ம் ஆண்டில் பெர்லின் நகரில் நடந்த மாபெரும் மே தின ஆர்ப்பாட்டங்களை கார்ல்

லிப் நெச்ட்டும், அவரைப் பின்பற்றும் சோஷியலிஸ்ட் இயக்கத் தோழர்களும் ஏற்பாடு செய்து நடத்தினர்கள். போலீஸின் தடையுத்தரவுகளையும் தொழிற்சங்கத் தலைவர்களின் எதிர்ப்புக்களையும் உடைத்தெரிந்து விட்டுப் பொங்கி யெழுந்த இந்த ஆர்ப்பாட்டங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் ஜீவாதார சக்திகளின் ஜீவிதத்தைப் புலப் படுத்தும் சாட்சியங்களாக விளங்கின.

1917-ம் ஆண்டில் யுத்தப் பிரகடனம் செய்த காலத்திலும், அமெரிக்காவில் மே தினக் கொண்டாட்டம் புறக்கணிக்கப்படவில்லை. அந்த வருஷத்தின் முற்பகுதியில், அதாவது ஏப்ரல் மாதத்தில் ஸெயிண்ட் லூயிஸில் கூடிய அவசர மகாநாட்டில் நிறைவேற்றிய யுத்த எதிர்ப்புத் தீர்மானத்தை சோஷியலிஸ்ட் கட்சியிலுள்ள தொழிலாளி வர்க்க சக்திகள் முழுமனத்தோடு வரவேற்றதோடு, மே தினக் கொண்டாட்டத்தை ஏகாதிபத்திய யுத்தத்தைக் கண்டனம் செய்யும் கிளர்ச்சியாகவும் பயன்படுத்திக் கொண்டு விட்டன. 1919–ம் வருஷம் கிளீவ்லாந்தில் மே தின ஆர்ப்பாட்டம் நடந்தது. அந்த ஆர்ப்பாட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியவர் சார்லஸ் இ.ரூதன்பெர்க் என்பவர். அவர் அப்போது உள்ளூர் சோஷியலிஸ்ட் கட்சியின் காரியதரிசியாக இருந்தார். பின்னர் அவர் அமெரிக்கக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவராகவும், கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசியாகவும் விளங்கினர். அவரது தலைமையில் நடந்த அந்த மே தினப் போராட்டம் போராட்ட சக்தி வாய்ந்ததாக இருந்தது. சுமார் 200,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தெருக்களில் அணிவகுத்து "பொதுஜனச் சதுக்க"த்துக்கு வந்து சேர்ந்தார்கள்; அங்கு மேலும் பல ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் அந்த அணி வகுப்பினரோடு கலந்து கொண்டார்கள். அங்கு நடந்த கூட்டத்தைப்

போலீஸார் மிருகத்தனமாகத் தாக்கினர்கள். அந்தத் தாக்குதலின் காரணமாக ஒரு தொழிலாளி உயிரை இழக்கவும், இன்னொரு தொழிலாளி படுகாய மடையவும் நேர்ந்தது.

1917-ம் வருஷம் நடந்த மே தினக் கொண்டாட்டமும், ஜுலை மாதத்தில் நடந்தகொண்டாட்டங்களும், கடைசியாக அக்டோபர் மாத ஆர்ப்பாட்டங்களும் ருஷ்யப் புரட்சியின் லட்சிய சக்தியை நோக்கிச்சென்ற வளர்ச்சிக் கட்டங்களைத் தவிர வேறு அல்ல. மனித சரித்திரத்திலேயே ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கி வைத்த ருஷ்யப் புரட்சியினால், மே தினக் கொள்கை ஆழ்ந்த முக்கியத்துவத்தையும் புதிய வலுவையும் பெற்றுத் திகழ்ந்தது. 1890-ம் வருஷம் மே மாதம் முதல் தேதியன்று நியூயார்க் யூனியன் சதுக்கத்தில் அமெரிக்கத் தொழிற்சங்கச் சம்மேளனத் தலைவர்கள் நடத்திக் காட்டிய மே தின ஆர்ப்பாட்டத்தின் லட்சிய தாகத்தை, அகில உலகத்தில் ஆறில் ஒரு பங்கான ருஷ்ய நாட்டுத் தொழிலாளர்கள் தாங்கள் பெற்ற வெற்றியின் மூலம் வாழ்க்கையில் கண் கூடாகப் பெற்று விட்டார்கள். நியூயார்க்கில் நடந்த வேலை நிறுத்தத்தின்போது தொழிலாளர்கள்முன் சமர்ப்பித்த தீர்மானத்தில், "எட்டுமணி நேர வேலைக்காகப் போராடும் அதே சமயத்தில், நாம் நமது இறுதி லட்சியத்தை மறந்துவிட மாட்டோம். நமது இறுதி லட்சியம் கூலி முறையை (அதாவது முதலாளித்துவ முறையை) ஒழித்துக் கட்டுவதுதான்" என்று கூறப்பட்டிருந்தது. இந்த லட்சியத்தை அடைவதில் ருஷ்யமக்கள் முதன்மையானவர்களாக வெற்றிபெற்று விட்டார்கள். ஆனால் 1917-ம் வருஷ வாக்கிலோ, அமெரிக்கத் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் தலைவர்கள் 1890-ம் வருஷத்தில் வகுத்த கொள்கைகளைவிட்டு விலகி எங்கோ தூரந் தொலைவில் சென்று விட்டார்கள். அவர்களது பிரதமக்கொள்கை

முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாப்பதாகவும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சிக்கு நடைபாவாடை விரிப்பதாகவும் மாறிவிட்டது. தொழிலாளர்கள் தங்களது சர்வதேசிய ஒற்றுமையைப் புலப்படுத்திய மே தினத்துக்கு, முதலாளித்துவச் சுரண்டலிலிருந்தும், கூலி அடிமைத்தனத்திலிருந்தும் விடுபெறுவதே இறுதிலட்சியமாகக் கொண்ட மே தினத்துக்கு, போராட்ட சக்திவாய்ந்த மே தினத்துக்கு, ருஷ்ய நாட்டின் தொழிலாளி வர்க்கத்தின் சரித்திரப் பிரசித்திபெற்ற சாதனைகளால் ஏற்பட்ட புதிய அர்த்த பாவத்தை அமெரிக்கத் தொழிலாளர்கள் உணர்ந்தறிந்து கொள்வதை அவர்கள் (அமெரிக்கத் தொழிற் சங்கச் சம்மேளனம்) விரும்பவில்லை.

ஏனெனில் 'ஒர்க்கர்' (தொழிலாளி) என்ற வாரப் பத்திரிகையில் 1923-ம் வருஷத்து மே தினத்தைப்பற்றி சார்லஸ் இ. ரூதன்பெர்க் பின்வருமாறு எழுதினார்: "முதலாளிகளின் உள்ளத்தில் பயத்தையும் தொழிலாளிகளின் உள்ளத்தில் உலகிலுள்ள சகல தொழிலாளிகளின் உள்ளத்திலும் நம்பிக்கையையும் ஊட்டும் இந்த மே தினத்தால், சரித்திரத்தால் இதுவரை என்றென்றும் காணாத பேரளவில் அமெரிக்காவில் கம்யூனிஸ்டுகளின் இயக்கம் பலப்பட்டிருப்பதைக் காணப்போகிறோம்...மாபெருஞ் சாதனைகளுக்கு வழிகாட்டும் பாதை தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. உலகில் பிறபகுதிகளில் ஏற்படப்போவது போலவே, அமெரிக்காவிலும் எதிர்காலத்தில் கம்யூனிஸம் தான் நிலவப்போகிறது."

இதற்குமுன் ஒரு தலைமுறைக்கு முன் நடந்த 'ஒர்க்கர்' வாரப் பத்திரிகையில் யூஜெனி வி, டெப்ஸ் என்பவர் மே தின இதழில் (அதாவது 1907-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் தேதி வெளி வந்த இதழில்) பின் வருமாறு எழுதினார் : "இதுதான் (மே தினம்) முதன் முதலான,

ஒன்றே ஒன்றான சர்வதேசியத் தொழிலாளர்களின் தினம். இந்தத்தினம் தொழிலாளி வர்க்கத்துக்கே உரிய தினம்; இந்தத் தினம் புரட்சிக்காகவே தோன்றிய தினம்."

மே தினத்தின் போராட்ட முக்கியத்துவத்தின் வளர்ச்சியை எதிர்ப்பதற்காக, அமெரிக்கத் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் தலைவர்கள் 'தொழிலாளர் தினம்' என்ற பெயரில் செப்டம்பர் மாதத்தில் வரும் முதல் திங்கட்கிழமையைக் கொண்டாடும்படி தூண்டிக்கொண்டிருந்தார்கள். இந்தப் புதிய தொழிலாளர் தினம் 1885-ம் வருஷத்தில் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் மே தின ஆர்ப்பாட்டங்களுக்கு முறிவு மருந்தாக உபயோகப்படும் என்ற எண்ணத்தோடு பல மாகாண சர்க்கார்கள் இந்தப்புதிய தினத்தை அதிகார பூர்வமாக வரவேற்று ஆமோதித்தன. இதுபோக, அமெரிக்கத் தொழிற் சங்கச் சம்மேளனத் தலைவர்களின் உதவியோடு ஹூவர் அரசாங்கம் மே மாதம் முதல் தேதியை சிசு பரிபாலன தினமாகக் கொண்டாடத் தொடங்கியது. சிசு பரிபாலனத்தில் திடீரென்று எழுந்த இந்த அக்கறையின் உண்மையான அர்த்தத்தை, 1928-ம் வருஷம் கூடிய மகாநாட்டில் அமெரிக்கத் தொழிற் சங்கச் சம்மேளனத்தின் காரியக் கமிட்டி சமர்ப்பித்த ஒரு ரிப்போர்ட்டின் பின்வரும் பகுதியிலிருந்து தெரிந்து கொள்ளலாம்: "கம்யூனிஸ்டுகள் மே மாதம் முதல் தேதியை இன்னும் தொழிலாளர் தினமாகவே கடைப் பிடித்து வருகிறார்கள். மே மாதம் முதல் தேதியை சிசு பரிபாலன தினமாகக் கொண்டாட வேண்டும் என்று அரசியல் மகா சபை நிறைவேற்றிய தீர்மானத்தை ஜனாதிபதி வெளியிட்டிருக்கிறார். எனவே, இன்று முதல் மே மாதம் முதல் தேதி சிசு பரிபாலன தினமாகக் கொண்டாடப் பெறும். இந்தத் தினத்தைக் கொண்டாடுவதன்

நோக்கம், குழந்தைகளின் தேகசுகத்தை நாம் என்றென்றும் பாதுகாத்து வரவேண்டும் என்ற உணர்ச்சியை மக்களிடையே பரப்புவதுதான். இது ஒரு புனிதமான பெரு நோக்கமாகும். அதே சமயத்தில், மே மாதம் முதல் தேதி இனிமேல் வேலை நிறுத்த தினம் என்றோ, கம்யூனிஸ்டுகள் தினம் என்றோ கருதப்படமாட்டாது.''

1929-ம் வருஷத்தில் ஏற்பட்ட நெருக்கடி.

முதலாம் உலக யுத்தம் முடிந்து பத்து வருஷ காலம் ஆன பின்னரும் கூட, முந்திய காலத்தில் பெற்ற அனுபவத்தின் மூலம் உண்மையை உணர மறுத்து விதண்டாவாதம் புரியும் பிற்போக்கான தொழிற் சங்கத் தலைவர்கள் சங்கத்தில் சேராத பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை ஒன்று படுத்திக் கட்டி வளர்க்க முனையாமல், முதலாளித்துவத்தால் மக்களுக்கு நேரவிருக்கும் பேராபத்துக்களைச் சமாளிப்பதற்காக, அவர்களை ஒன்று திரட்டிப் பலப்படுத்த முனையாமல், முதலாளித்துவத்தின் கீழ்கூட நிரந்தரமான சுபிட்சம் நிலவ முடியும் என்ற மனப்பிராந்தியைத் தொழிலாளர் மத்தியில் பரப்புவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். 1929-ம் வருஷத்தின் இறுதியில் பொருளாதார நெருக்கடி முற்றிய போது, தொழில் ஸ்தாபனங்களும், முதலாளித்துவ ஸ்தாபனங்களும் நெருக்கடியின் முழுப்பாரத்தையும் தொழிலாளர்களின் மீது சுமையேற்றிவைக்க முனைந்தார்கள். எனவே, தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்கள் செய்வதன் மூலமும், வேலையில்லாதவர்களை ஒன்றுகத் திரட்டி, மாபெரும் போராட்டங்களை நடத்துவதன் மூலமும்தான் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது. கம்யூனிஸ்டுகளின் தலைமையிலே நடந்த இந்தப் போராட்டங்களின் விளை

வாக, அமெரிக்கத் தொழிலாளர்கள் படுகேவலமான துயரங்களுக்கு ஆளாகாமல் தப்பிக்க முடிந்தது; தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகளை விஸ்தரிக்க முடிந்தது. மேலும் 1930—40 வருஷங்களுக்கிடையில், அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்தின் சரித்திரத்தில் என்றுமே காணாத அளவில் தொழிற்சங்க வளர்ச்சி அமோகமான அளவில் வளர்ச்சி பெற்றது. அமெரிக்கத் தொழிற்சங்கச் சம்மேளனமும், தொழிற் சங்கங்களின் காங்கிரஸூம் (C. I. L) இந்த வளர்ச்சியைப் பிரதிபலித்தன. 1935-ம் வருஷத்தில் தொழிற் சங்கங்களின் காங்கிரஸ் தொடங்கப் பட்டதும், அதன் துரிதமான வளர்ச்சியும் அமெரிக்கச் சரித்திரத்திலும் அமெரிக்கத் தொழிலாளர் சரித்திரத்திலும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெருஞ் சாதனையாகும். அமெரிக்கத் தொழிலாளர்களின் உத்வேக மிக்க எழுச்சியின் பயனாக, சம உரிமைகளுக்காகப் போராடும் நீக்ரோ மக்களின் போராட்டத்தில் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்துக்கான சூழ் நிலையை உண்டாக்க முடிந்தது. அதன் மூலம் அமெரிக்க நாட்டின் ஜனநாயக முன்னணியை மேலும் பலமாகக் கட்டி வளர்க்க முடிந்தது.

சுமார் பதினைந்து வருஷ கால வரையறைக்குள்ளாகவே நேர்ந்து விட்ட ஏகாதிபத்திய யுத்தம், தொழிலாளர் புரட்சி, பொருளாதார நெருக்கடி முதலியவற்றால் ஆட்டங் கொடுத்துக் குலுங்கிப் போன உலக முதலாளித்துவம் ஒரு பொது நெருக்கடிக்கு ஆளாகிக் கொண்டிருந்தது. ஆனால் முதலாம் உலக யுத்தத்தின் பயனாக விளைந்த முதலாளித்துவத்தின் எதிர்ச் சக்திகளின் பலம் இந்த நெருக்கடியின்போது அதிகரிக்கத்தான் செய்தது. மேலும், உலகத்தின் ஆறிலொரு பங்கு நிலமான ருஷ்யாவில் முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டிய] ருஷ்யப் புரட்சியும், காலனி நாடுகளின் பிரம்மாண்டமான போராட்டங்களின்

பெரு வளர்ச்சியும், பெரு முதலாளித்துவ நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், ஜனநாயக உரிமைகளைப் பெறவும் விரிவாக்கவும் துணிந்து நின்ற உறுதி மனப்பான்மையும் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியை அதிகப்படியாகப் பாதிக்கத் தொடங்கின. எனவே முதலாளித்துவ ஸ்தாபனங்களும், தொழில் ஸ்தாபனங்களும் நாட்டின் அரசியலிலும் பொருளாதாரத்திலும் தமக்குள்ள பிடியை விட்டுக் கொடுக்காது காப்பாற்ற முனைந்தன; சரித்திரத்தின் தவிர்க்க முடியாத வளர்ச்சி கதியை மந்தப்படுத்துவதற்காக, பயங்கரமான பாஸிஸச் சர்வாதிகார நடவடிக்கைகளைக் கையாளத் தொடங்கின. பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளின் பெரு முதலாளிக் கும்பல் பாஸிஸ இயக்கங்களை ஆதரித்து, அவற்றுக்குத் தங்கள் பலத்தையெல்லாம் கொடுத்து உதவியது. தோல்வியுற்ற ஜெர்மனியிலும், தொழிலாளர் வர்க்கம் எங்கெந்த நாட்டில் பலவீனமுற்று ஒற்றுமை இழந்து போய், முற்போக்குச் சக்திகள் சிதறுண்டு போய், பாஸிஸத்தின் வெற்றிக்குப் பாதை வகுத்துக் கொடுத்ததோ, அந்தந்த நாடுகளிலும் முதலாளித்துவக் கும்பல் பாஸிஸத்தைப் பண பலத்தாலும் செல்வர்க்காலும் வளர்த்துவிடத் தொடங்கியது. இந்தக் காரியங்கள் அனைத்தும் நூற்றுண்டுக் காலமாகப் போராடி அடைந்து வந்த ஜனநாயக வெற்றிகளை சர்வதேச ரீதியில் ஒழித்துக் கட்டுவதற்காக, அகில உலகத்தின் பெருந்தன முதலாளித்துவம் முழுமூச்சோடு முனைந்து நின்றதை மட்டும் சுட்டிக் காட்டவில்லை; ஆனால், புதியதொரு உலக யுத்தத்துக்கான பாதையைச் செப்பனிட்டு உருவாக்குவதையும் சுட்டிக் காட்டியது.

பாஸிஸத்துக்கு எதிராக யுத்தம்

1933-ம் வருஷத்திலிருந்து 1939-ம் வருஷம் வரையிலும் ஜெர்மானிய பாஸிஸம் உலகத்தின் பிற்போக்குக் கும்பலின் தலைமைப்பீடமாகவிளங்கிவந்தது. சோஷியலிஸ நாட்டுக்கு எதிராக ஒரு நாசகார யுத்தத்தைத் தொடங்க வேண்டும் என்பதற்காக, ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியம், நாஜி ஜெர்மனியை வளர்த்துவிட முனைந்து நின்றது. உலகம் முழுவதையும் திட்ட பூர்வமாக அடிமைப் படுத்த வேண்டும் என்ற தனது சொந்த ஏகாதிபத்தியக் கொள்கைகளின் காரணமாக, ஜெர்மானியப் பாஸிஸமும் இரண்டாவது உலக யுத்தத்துக்கான ஆயத்த முயற்சிகளில் அசுர வேகத்தில் ஈடுபட்டிருந்தது. ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளும் இந்தச் சதிவேலையில் கலந்து கொண்டார்கள். உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டின் தேசிய சுதந்திரத்தையும் பறிப்பதற்காக யுத்தத்தை ஆரம்பிக்கும் பாதையில் தான் பாஸிஸம் வளர்ந்து கொண்டிருந்தது. எனவே, இந்த மாதிரிச் சூழ் நிலையில், மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தின் தலைவிதியைத் தொழிலாளி மக்களும், விவசாயி மக்களும், ஒவ்வொரு பகுதியிலுமுள்ள காலனி நாடுகளின் அடிமை மக்களும் ஒன்றுபட்டு கைகோத்துஅணி வகுத்து நிற்பதன் மூலம் தான் காப்பாற்ற முடியும் என்பது நாளுக்கு நாள் தெள்ளத் தெளிவாகப் புலனாகிக் கொண்டிருந்தது. அவர்கள் மட்டும் தான், அவர்களது ஒற்றுமையாலும் ஐக்கிய எதிர்ப்பினாலும் உலகத்தின் சகல ஜனநாயக சக்திகளையும், ஒன்று திரட்ட முடியும் என்பதும், அவர்களது ஒற்றுமைதான் பெருந்தன முதலாளித்துவக்கும் பால் ஊட்டி வளர்க்கப்பட்டு வரும் பிற்போக்குக் கொள்கையின் நாச வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதும் புலனாகிக் கொண்டிருந்தது. எனவே,

1930-40-ம் வருஷங்கள் அனைத்திலும் நடந்த மே தினப் போராட்டங்களில் பாஸிஸ ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்றும், உலகத்துக்குப் புதிதாக விளைய விருக்கும் பயங்கர நாசத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக, சகல ஜனநாயக சக்திகளையும் மக்களையும் ஒன்றுபடுத்தவேண்டும் என்றும் எங்கு பார்த்தாலும் கோஷங்கள் எதிரொலித்தன.

தொழிலாளி வர்க்கம்தான் ஒரு தேசத்தின் உண்மையான ஜீவாதாரம் என்பதை இரண்டாவது உலக யுத்தம் எந்தவித சந்தேகாஸ்பதத்துக்கும் இடமின்றி நிர்ணயம் பண்ணிக் கூறிவிட்டது. தொழிலாளி வர்க்கம் பிளவுண்டு போயிருந்தால்தான் பாஸிஸம் உலகம் முழுவதையும் நாச யுத்தப்பாதையில் கொண்டு செலுத்த முடியும் என்பதையும், அதிகாரத்துக்கு வரமுடியும் என்பதையும் இரண்டாவது உலக யுத்தம் உணர்த்திக் கூறியது, பாஸிஸ அரக்கனை ஒழித்துக் கட்டுவதற்காகவும். ஜன நாயகத்தையும் முன்னேற்றத்தையும் பாதுகாப்பதற்காகவும் மனித குலத்தின் பெரும்பான்மையான ஜன நாயக சக்திகளை ஒன்றுதிரட்டி, தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டு இயங்கும் போராட்ட சக்தியாக முன்னின்று இயங்குமேயானால், பாஸிஸம் ஒருபோதும் வெற்றியடைய முடியாது என்பதையும் இரண்டாவது உலக யுத்தம் அறிவுறுத்திச் சென்றது. இந்த ஜீவ மரணப் போராட்டத்தின்போது, தேசிய விடுதலைக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் நடந்த சரித்திர மகத்துவம் பெற்ற யுத்தத்தில், சோவியத் யூனியனும் சோவியத் நாட்டின் தொழிலாளர் கூட்டமும்தான் முன்னணியில் நின்று போராடின என்ற உண்மையைச்

சகல திசைகளிலுள்ள அகில உலகத்தின் ஜனநாயக மக்கள் அனைவரும் கண்ணாரக்கண்டு கொண்டார்கள்.

யுத்த காலத்தில் உலகிலுள்ள தொழிலாளி வர்க்கம் முழுமையும் வேலை நிறுத்தம் செய்யவில்லை; ஆனால் அதற்குப் பதிலாக பாஸிஸ்ராணுவத்தை ஒழித்துக் கட்டுவதற்கான ஆயுதங்களை உற்பத்தி செய்யும் திருப்பணியில் முனைந்து நிற்பதன் மூலம் மே தினத்தைக் கொண்டாடினார்கள். 1945 – ம் வருஷத்தில் யுத்தம் முடிவுற்ற பின்னர் நடந்த முதலாவது மே தினக் கொண்டாட்டத்தின்போது லட்சோப லட்சக்கணக்கான தொழிலாளர்கள், முக்கியமாக வெற்றியும் விடுதலையும் பெற்ற ஐரோப்பிய நாடுகளின் தொழிலாளர்கள், பாஸிஸத்தின் சகல மிச்சம் மிஞ்சாடிகளையும் பூண்டோடு அழித்து ஒழிக்கும் போராட்டத்தில் தமக்குள்ள உறுதியையும், பெருந்தன முதலாளிக் கும்பல் தனது மூலதனப் பலத்தின் மூலம் தனது கொடுங் கோலாட்சியை நிலைத்திருக்கச் செய்யும் மார்க்கமாக, பாஸிஸத்தை மீண்டும் கைக் கொள்ளாதவாறு தடுப்பதற்கு, உலகத்தின் சகல தொழிலாளிகளையும் முற்போக்குச் சக்திகளையும் ஒன்று திரட்டி ஓரணி வகுப்பதுதான் உத்தரவாதமான ஒரே மார்க்கம் என்ற குறிக்கோளை நிறைவேற்ற முனைந்த உறுதியையும், அதன் மூலம் ஜனநாயகத்தைக் காப்பாற்றி ஜனநாயகத்தை விஸ்தரித்து, மக்களின் கையில் தேசாதிகாரத்தைக் கொடுப்பதற்காகவும், நிரந்தரமான சமாதானத்தை நிலை நிறுத்துவதற்காகவும், சுரண்டலும் அடக்குமுறையும் அற்றசோஷியலிஸ உலகத்துக்கான பாதையைத் திறந்து விடுவதற்காகவும் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டுக் கிளர்ந்தெழுந்து மே தினத்தைக் கொண்டாடியதையும் நாம் கண்டோம்.

சமாதானத்துக்காகவும், மனித குலம் முழுமைக்கும் சுபிட்சமான எதிர்காலத்தை நிர்ணயம் செய்வதற்காகவும் போராடிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு நாட்டின் தொழிலாளி வர்க்கத் தோழர்களும் மே தினத்தன்று சர்வ தேசிய ஒற்றுமை உணர்ச்சியோடும் தோழமை யுணர்ச்சியோடும் உலகத்தின் சகல மக்களுக்கும் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்து வருகிறார்கள்.

முற்போக்கு இலக்கியங்கள்

தாய்

உலகத்தின் முற்போக்கு எழுத்தாளர் தலை வரும், மக்கள் எழுத்தாளரின் மூலவருமான மாக்ஸிம் கார்க்கி எழுதிய அமர இலக்கியம் இந் நாவல். இந் நாவலின் மூலம் பாட்டாளி மக்களின் பிரச்னையையும், அவர்களின் விடுதலைக்கான வழி வகைகளையும் விவரிக்கிறார் ஆசிரியர். ரகுநாதன் தமிழாக்கம். விலை ரூ **7-8.**

இந்தியாவைப் பற்றி

சுதந்திரத்தோடு பிறந்த மனிதன்—சுதந் திரத்தை அனுபவிப்பதற்கும், பாடுபட்ட பாட் டாளி—அதன் பலனை அனுபவிப்பதற்கும், மக்கள்—மக்கள் தன்மையை இழக்காமல் வாழ் வதற்குமுரிய வழிவகை செய்யும் தத்துவத்தைப் பெற்றெடுத்த பிதா—**கார்ல் மார்க்ஸ்** நம் நாட்டைப் பற்றி எழுதியுள்ள கருத்துக்கள். அற்புதமான உண்மைகள்!! நம்மிடையே நமக்குத் தோன்றாது மறைந்திருந்த உண்மைகளைக் கோடிட்டுக் காட்டு கிறார். 'ஜனசக்தி' ஆசிரியர்—ராமகிருஷ்ணனின் தமிழாக்கம்.

இந் நூல்

மே தினம் தொழிலாளிகளின் தினம். இந்தத் தினத்தின் சரித்திர வரலாறுதான் இந்த நூலில் காணப்படுவது. இந்த நூலின் ஆசிரியர் ஒரு பிரபல அமெரிக்க நூலாசிரியர். இவரைச் சமீபத்தில் அமெரிக்க அரசாங்கம் கைதுசெய்து சிறைக்குள் தள்ளியது. ஜனநாயக நேர்மைக்கு விரோதமான முறையில் இவர்மீது அமெரிக்க அரசாங்கம் பிரயோகித்த அடக்கு முறையைக் கண்டித்து, உலகத்தின் சகல மூலைகளிலிருந்தும் கண்டனங்களும், மகஜர்களும் ட்ருமன் சர்க்காருக்கு அனுப்பப்பட்டன. இந்த ஜனநாயகத் திருப்பணியில் இந்தியாவிலுள்ள—ஏன், தமிழ் நாட்டிலுமுள்ள பல்வேறு முற்போக்குச் சக்திகளும் பங்கெடுத்துக் கொண்டது குறிப்பிடத் தகுந்தது.

நியூ யார்க் இண்டர்நேஷனல் பப்ளிஷர்ஸ் வெளியிட்டுள்ள இந்த நூலின் ஆங்கிலப் பதிப்பின் துணை கொண்டு இந்நூல் தமிழாக்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு எம் நன்றி உரியது.